பக்கங்கள்: 24
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 50 தை 02ஆம் நாள் புதன்கிழமை 16 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049

# வடக்கு, கிழக்கு மாகாண வீடமைப்பு ஆரம்பமானது

## தைப்பொங்கல் தினமான நேற்று அடிக்கல் நடப்பட்டது



யாழ்ப்பாணம், ஜனவரி 16

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய கல் வீட்டுத் திட்டத்தில் முதலாவது வீட்டுக்கான அடிக்கல், தைப் பொங்கல் தை முதல் நாளான நேற்று நடப்பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா அடிக்கல்லை நட்டு ஆரம்பித்து வைத்தார். வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தென்மயிலை, மயிலிட்டி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

>> 06

# பிலிப்பைன்ஸ் அரச தலைவரை சந்திக்கின்றார் மைத்திரி

கொழும்பு, ஜன.16

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிலிப்பைன்ஸ் நாட்டின் அரசதலைவர் ரொட்ரிகோ டுட்டேர்டேக்கும் இடையே இன்று சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஐந்து நாள்கள் உத்தியோகப்பூர்வ பயணம் மேற்கொண்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிலிப்பைன்ஸ் பயணித்தார். அந்த நாட்டு அரச தலைவரின் சிறப்பு அழைப்புக்கு இணங்கவே இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் 6 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

சுற்றுலாத்துறை ஒத்துழைப்பு. வெளிநாட்டு வேலை

>> 06



# நாச்சிமார் கோயிலடியில் வாள்வெட்டுத் தாக்குதல்

## இரு இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயில் வளாகத்தில் நேற்று மதியம் வாள்வெட்டுச் சம்பவம்

>> 06

# லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பெண் உத்தியோகத்தர் கைது

## பூநகரியில் ஆதாரத்துடன் பிடித்தது லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜன.16

போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவியாகக் கிணறு அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபா வழங்குவதற்கு இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் பூநகரி

>> 06

# பொருளாதாரச் சிக்கலுக்கு பொதுத் தேர்தலே தீர்வு

## கூட்டு எதிரணி கூறுகின்றது

கொழும்பு, ஜன.16

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாகப் பொதுத் தேர்தலை உடனடியாக நடத்துவதே சிறந்தது என்று கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்த்தன இவ்வாறு குறிப்

>> 06

# அரசமைப்பு உருவாக்கத்தை கைவிடுமாறு வலியுறுத்துக

## மகாநாயக்கர்களிடம் கோருகின்றது அஸ்கிரிய, மல்வத்து பீட இணக்க சம்மேளனம்

கொழும்பு, ஜன.16

அரசதலைவரும், தலைமை அமைச்சரும் உடனடியாக அரசமைப்பு உருவாக்கப் பணிகளைக் கைவிட வேண்டும் என்று மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்த வேண்டும்.

>> 06



# உறவுகளைத் தேடி நேற்றும் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜன.16

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தைப் பொங்கல் தினமான நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

வவுனியா கந்தசுவாமி கோயிலில் பிற்பகல் 12.30 மணியளவில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்ட அவர்கள் பசார் வீதி வழியாக, ஹொரவப்பொத்தான வீதியூடாகச்

>> 06

# வவு. ஈரப்பெரியகுளத்தில் மூழ்கி 16 வயது சிறுவர்கள் இருவர் சாவு

## பொங்கல் தினமான நேற்றுச் சோகம்



பரஞ்சோதி கரிகரன்

வவுனியா, ஜன.16

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் மூழ்கி இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களான தாஷ்பிரபா திபிசன் (வயது-16) மற்றும் பரஞ்சோதி கரிகரன் (வயது-16) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

பொங்கல் தினமான நேற்று ஆறு நண்பர்கள் இணைந்து ஈரப்பெரியகுளத்துக்குச் சென்றுள்ளனர். அங்கு உணவருந்திய பின்னர் கை கழுவுவதற்கு ஒருவர் குளத்துக்குச் சென்றுள்ளார். தவறி உள்ளே விழுந்துள்ளார். அவரைக் காப்பாற்றச் சென்றவரும்

>> 06



தாஸ்பிரபா திபிசன்

# அதிகாரத்தை பெறுவதற்கு மக்களை ஏமாற்றுகின்றனர்

## ஹபீர் காசீம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.16

அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்காகச் சிலர் பொதுமக்களை ஏமாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று அமைச்சர் கபீர் ஹாசிம் குற்றம் சாட்டியுள்ளார்.

மாவனெல்லப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: பொதுமக்களை ஏமாற்றி ஊழல் மோசடி

>> 06



# வடமாகாண அரச நிறுவனங்களிலுள்ள மொழிப் பிரச்சினைகளை ஆராயக் குழு!

## வடக்கு ஆளுநர் ராகவன் நியமித்தார்



**யாழ்ப்பாணம், ஜன. 16**

**வடக்கு மாகாணத்தின் அரச நிறுவனங்களில் காணப்படும் மொழிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஐவரடங்கிய சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளரொருவரின் தலைமையில் இந்தக் குழுவை நியமித்துள்ளார்.**

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதிக்கு முன்னர் வடக்கு மாகாணத்தின் சகல அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் மும்மொழிக்கொள்கையைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வடக்கு மாகாண ஆளுநர் தனது பதவியேற்பின்போது சுட்டிக் காட்டியிருந்தார்.

அந்த நடவடிக்கைகள் குறிப்பிட்ட அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் அதேவேளை அந்த செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலேயே இந்த மொழிக் குழுவை ஆளுநர் அமைத்துள்ளார்.

இந்த மொழிக் குழுவின் தலைவராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத் துறையின் மூத்த விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். குழுவின் உறுப்பினர்களாக பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முன்னாள் அதிபர் எஸ்.பத்மநாதன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் எஸ்.லலீசன், யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் மொஹைதீன் ஹனி சேகு ராயீத்து, வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (இரண்டாம் மொழி) திருமதி சுதர்ஷின் பெர்னாண்டோ ஹப்புகொட்டுவ ஆகியோரே ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களாவார்.

இதன்படி வடக்கு மாகாணத்தின் அரச நிறுவனங்களில் மொழிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது எழும் பிரச்சினைகள் தொடர்பிலும் இந்தக் குழுவுக்கு அறிவித்து உரிய ஆலோசனைகளையும்தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு இது தொடர்பான முறைப்பாடுகள், கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் இருப்பின் அவற்றை தலைவர், மொழிக் குழு, ஆளுநர் செயலகம், பழைய பூங்கா, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கோ அல்லது 0212219374 என்ற தொலைநகல் இலக்கத்துக்கோ அனுப்பி வைக்க முடியும் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)





# மும்மதத்தினரும் இணைந்து அட்டனில் பெரும் பொங்கல்

அட்டன், ஜன. 16

மும்மத மக்களும் இணைந்த பொங்கல் கொண்டாட்டம் அட்டனில் நேற்று நடைபெற்றது.

அட்டன் வர்த்தகர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த விழா அட்டன் சக்தி மண்டபம் முன்பாக கொண்டாடப்பட்டது. அதில் மும்மதங்களையும் சேர்ந்த மக்களும் கலந்துகொண்டிருந்தனர். அவர்களுக்குப் பால், கடலை, பொங்கல் என்பன சமைத்து பகிர்ந்தளிக்கப்பட்டன.

இனங்களுக்கிடையில் நல்லுறவு, புரிந்துணர்வு அவசியம் என்று வலியுறுத்தப்படும் நிலையில் இந்தப் பொங்கல் இடம் பெற்றுள்ளது. (கு)

# அறுவடை இடம்பெறும்போது உடன் கொள்வனவுக்குத் தயார்

## மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக அறுவடை நெல் கொள்வனவுகள் அறுவடை தொடக்கத்தில் இருந்தே நடைபெறவுள்ளன. இதற்கான முடிவுகள் மாவட்டச் செயலர் மா. உதயகுமாரின் அறிவுறுத்தல்களுக்கமைவாக ஆரம்பமாகவுள்ளன என்று மாவட்ட மேலதிக செயலர் சுதர்சினி சிறிகாந்த் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் நடைபெற்ற நெல் அறுவடைக் கொள்வனவு குறித்து நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வருடா வருடம் ஏற்படும் விவசாயிகளின் நெல் விற்பனைப் பிரச்சினைகளைத் தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு, மணல்பிட்டி, தும்பங்கேணி, கரடியனாறு, புலிபாய்ந்தகல், கஜுவத்தை ஆகிய பகுதிகளிலுள்ள களஞ்சியசாலைகளில் நெல் சந்தைப்படுத்தும் சபையால் கொள்வனவு இடம்பெறும். நடமாடும் நிலையங்கள் ஊடாகவும் பல பகுதிகளில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படும் என்று நெல் சந்தைப்படுத்தும் சபையின் பிராந்திய முகாமையாளர் டப்ளியூ.எம்.என்.ஆர்.வீரசேகர தெரிவித்தார்.


விவசாயிகள் நெல் கொள்வனவு நிலையத்தில் நெல்லை வழங்கி நியாயமான விலையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நாடு நெல் 38 ரூபாய் வீதமும், சம்பா நெல் 41 ரூபா வீதமும் விவசாயிகளிடமிருந்து அரசு கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது.

இதற்கான, விண்ணப்பங்களைக் களஞ்சியசாலைகளில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு விவசாயிடமிருந்து 2ஆயிரம் கிலோக்கிராம் நெல் கொள்வனவு செய்யப்படும். சரியான ஈரப்பதனுடையதாக நெல் விவசாயிகளால் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்தத் தொகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என்றும் நெல் சந்தைப்படுத்தும் சபையின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (கு-46)

# இராசவீதியோரம் குவிக்கப்பட்டுள்ள கற்களால் பயணிகளுக்கு இடையூறு

## விபத்துக்களை தடுக்க உடன் நடடிக்கை எடுக்கக் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன.16

கோப்பாய் இராசவீதியில் வீதித் திருத்தத்துக்காகப் பறிக்கப்பட்டுள்ள கற்கள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். குவிக்கப்பட்டுள்ள கற்களால் நேற்றிரவும் விபத்து ஒன்று நடந்துள்ளது. அதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இராசபாதையின் இரு புறங்களிலும் வீதித் திருத்தத்துக்காக கற்கள் பறிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் குவிக்கப்பட்டுள்ள கற்கள் வீதிக்குள்ளாகவும் காணப்படுகின்றன.

அந்தப் பகுதியில் வீதியோர மின் விளக்குகள் குறைவாகக் காணப்படுவதால் இரவில் வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏனைய வாகனங்களுக்கு வழிவிடும் போது கற்களுடன் மோதி விபத்துக்குள்ளாக வேண்டியுள்ளது என்றும் பொதுமக்கள் கூறுகின்ற னர்.

நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரும் கல் குவியலில் மோதி விபத்துக்குள்ளாகினார். அவர் நோயாளர் காவு வண்டி மூலம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். இந்த விடயம் தொடர்பில் உரியவர்கள் உடன் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேச மக்களும், பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-21)

# நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தினரை எந்த நீதிமன்றுக்கும் அனுப்ப மாட்டோம்

## நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 16

நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தினரை எந்தவொரு நீதிமன்றத்திலும் நிறுத்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று நீதியமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். கொழும்பு கஹவத்தவில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் எப்போதும் பௌத்தத்தை மதிக்கிறோம். நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு எந்தவொரு நல்ல பௌத்தருமோ, அல்லது நாட்டின் எந்தவொரு பகுதியுமோ விரும்பவில்லை. நாட்டில் நிலவிய மோசமான போரை, தமது வியர்வையையும் குருதியையும் சிந்தி முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தினரை எந்தவொரு நீதிமன்றத்துக்கும் கொண்டு செல்வற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம். எமக்கு எதிராகக் கூறப்படுவதெல்லாம் பொய்யான பரப்புரைகள் - என்று தெரிவித்தார்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட வேண்டும், போர்க் குற்றங்களில் ஈடுபட்ட படையினரைப் பன்னாட்டு நீதிமன்றில் முற்படுத்தவேண்டும் என்று தமிழ்மக்கள் கோரிக்கை விடுத்துவரும் நிலையில் நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். (கு)

# திடீர் உயர் அழுத்த மின் காரணமாக பழுதடைந்த பொருள்களுக்கு இழப்பீடு

## வழங்கக்கோரி மக்கள் மின்சார சபைக்குக் கடிதம்

மூதூர், ஜன. 16

திருகோணமலை உதயபுரி கிராமத்தில் பொது மக்களின் வீடுகளில் உள்ள மின்சார உபகரணங்கள் திடீரென்று பழுதடைந்துள்ளன. மின்சாரக் கோளாறு காரணமாகவே அவை பழுதடைந்துள்ளன என்று தெரிவித்துள்ள மக்கள், அவற்றுக்கு உரிய இழப்பீடு தரவேண்டும் என்று மின்சார சபையிடம் கடிதம் மூலமாக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மின்சார சபையின் தலைமைப் பொறியியலாளருக்கு பாதிக்கப்பட்டதாகக் கூறும் மக்கள் எழுத்து மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி காலை தொடக்கம் பிற்பகல் வரை தாம் பாவித்த மின்சார உபகரணங்களான தொலைக்காட்சி, அலைபேசி, மின்விசிறி, குளிர்சாதனப்பெட்டி, சமையலறைச் சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் மின் கோளாறு காரணமாகப் பழுதடைந்துள்ளன. இவ்வாறு 30க்கும் அதிகமான வீடுகளில் இத்தகைய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். அன்றாடம் கூலி வேலைக்குச் சென்று சிறுகச்சிறுகச் சேர்த்த தமது வீட்டு மின்சார உபகரணங்கள் பழுதடைந்தமைக்கு மின்சார சபையில் வழங்கப்பட்ட மின்சாரத்தின் உயர் மின் அழுத்தமே காரணமாக இருக்கலாம் என்று நாம் நம்புகின்றோம். எனவே இதனை ஆராய்ந்து தமக்கு இழப்பீடு வழங்குமாறு பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களும் கையொப்பமிட்டுக் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளனர். (கு-40)

# அரச தலைவராவதற்கு மகிந்த சிறந்த தெரிவு

## குமார வெல்கம கூறுகின்றார்

கொழும்பு, ஜன.16

அரச தலைவர் தேர்தல் ஒன்று வந்தால், மகிந்தவே எனது தெரிவாகும் என சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

அரசமைப்புக்கு எதிராகச் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் அரச தலைவர் வேட்பாளராக நியமிக்க ஆதரவளிக்கப் போவதில்லை.

என்னைப் பொறுத்தவரையில் மகிந்த ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியும். 19 ஆம் திருத்தத்தில் அவர் போட்டியிட முடியாது என்று எந்த தடையும் இல்லை.

அதேபோன்று அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வேட்புமனுத் தாக்கல் செய்தால் அதனை நிராகரிக்கப் போவதில்லை என தேர்தல்கள் ஆணையாளரும் தெரிவித்திருக்கின்றார் - என்றார். (எ)



## காபன் வரித் திட்டத்துக்கு கிளம்பியது பெரும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன.16

காபன் வரி அறவிடும் அரசின் புதிய திட்டத்தை உடன் மாற்றிக் கொள்ள வேண்டும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளதாவது:

இந்த அரசு இதுவரையில் அறிமுகம் செய்த புதிய விடயங்களில் பெரும் பிரச்சினைகள் உள்ளன. அவற்றைப் போன்ற ஒன்றாக இந்தக் காபன் வரி காணப்படுகின்றது. எரிபொருள் சூத்திரம் என்று ஒன்றை அரசு அறிமுகம் செய்துள்ளது. அதில் இந்த வரியை சேர்த்திருக்கலாம். தனியாக காபன் வரி என்ற ஒன்று அவசியமற்றதாகும். வீட்டில் பயணங்களுக்கு பயன்படுத்தாது நிறுத்தி வைத்துள்ள வாகனங்களுக்கும் இந்த வரியை அறவிடுவது நியாயமான ஒன்றா? என்பதை அரசுக்கு இந்த வரி தொடர்பில் ஆலோசனை வழங்கிய அதிகாரிகள் கருத்தில் கொள்ளாதது ஏன்? - என்றார். (எ)

## மைத்திரியை வேட்பாளராக நிறுத்த மகிந்த சம்மதமாம்!



கொழும்பு, ஜன.16

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஆதரவுடன் அடுத்த அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக நிறுத்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தீர்மானித்துள்ளார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுதந்திர கட்சி மற்றும் பொதுமக்கள் முன்னணிக் கட்சிகளின் தலைவர்கள் 'கை' அல்லது 'மொட்டு' தவிர வேறு ஒரு சின்னத்தின் கீழ் ஒரு கூட்டணியை உருவாக்க சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் முழு ஆதரவு இருந்தால் அரச தலைவர் சிறிசேனவை ஆதரிப்பேன் என அரச தலைவரின் சகோதரனான டட்லி சிறிசேனவிடம் கோட்டாபய ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

அதேவேளை அரச தலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிடுவார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 4.2 மில்லியன் வாக்குகள் மற்றும் பொதுஜன பொதுமக்கள் முன்னணியின் 1.5 மில்லியன் வாக்குகள் ஆகியவற்றுடன் அவரது வெற்றி நிச்சயம் எனவும் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தல் விரைவில் நடக்கக் கூடும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## 2014இல் பெற்ற கடன்களை மீளச் செலுத்தியது இலங்கை

கொழும்பு, ஜன.16

2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசால் பெறப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மீளச் செலுத்தப்பட்டுள்ளது என்று பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் பொது வழங்கல் அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாம் இவ்வாறான நிதிகளை விரைவில் திருப்பிச் செலுத்த வேண்டும். இதுபோன்ற பல கடன்களை நாம் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவும் கடன் மீளச் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்திய பெருமையை இலங்கை தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்று அவர் கூறியுள்ளார்.

நட்பு நாடுகள், சர்வதேச இறையாண்மை நிதிகள் மற்றும் கடன் வழிமுறைகளிலிருந்து காலவரையறையற்ற கடன்களைக் கொண்டு அதன் வெளிநாட்டு நாணயங்களை நிர்வகிப்பதில் அரசு நம்பிக்கையுடன் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## அம்பாந்தோட்டையில் யப்பான் போர்க்கப்பல்

கொழும்பு, ஜன.16

இலங்கைக்கு நல்லெண்ணப் பயணமாக வந்துள்ள யப்பான் கடல் சார்ந்த சுய பாதுகாப்புப் படைக் கப்பலான 'இக்கசுச்சி' அம்பாந்தோட்டையில் நங்கூரமிடப்பட்டுள்ளது. இலங்கை கடற்படை மரபுகளுக்கு ஏற்ப நேற்று அதற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் தெற்கு கடற்படை கட்டளைத் தளத்தின் பிரதிக் கட்டளைத் தளபதி, ரஞ்சித் பிரேமரத்ன மற்றும் இலங்கையின் யப்பானிய தூதரகத்தின் பாதுகாப்புச் செயலர் கப்டன் அட்சுஹிரோ மோரோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

மூன்று நாள் தங்கவுள்ள யப்பான் கடற்படைக் குழுவினர் பிரபலமான சுற்றுலா தளங்களை பார்வையிடல், இரு படைகள் இடையேயான கூட்டுப்பயிற்சி மற்றும் இலங்கை கடற்படை ஏற்பாடு செய்த பல சிறப்பு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கவுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெரமுனவுடன் இணைந்தால் சு.கவுக்கு ஆபத்து

மனுஷ கூறுகிறார்



கொழும்பு, ஜன.16

பொதுஜன பெரமுனவுடன் இணைந்து சிறி லங்கா சுதந்திர கட்சி கூட்டணி அமைக்குமாக இருந்தால் குறுகிய காலத்தில் சுதந்திரக் கட்சி பெரும் அழிவைச் சந்திக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர்களுடன் இணைந்து கூட்டணி அமைப்பதாகக் கூறும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் வீணான சவாலுக்கு உள்ளாக வேண்டி வரும் என்பதை புரிந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)



கெற்பேலி சிவசக்தி முன்பள்ளியின் அபிவிருத்திக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கிய 2 இலட்சம் ரூபாவுக்கான காசோலை சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரால் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. பிரதேச சபை உப தவிசாளர் மயூரன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், பிரதேச செயலக அலுவலர் கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 03 . 1962



இறப்பு 15 . 01 . 2019

### தம்பிஜயா ஸ்ரீரவீந்திரன்

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும் பஸ்ரா (Basara, Iraq) ஈராக்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பிஜயா ஸ்ரீரவீந்திரன் (ரவி) (15.01.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா பூமணி தம்பதியினரின் அன்பு மகனும் நீரா்வின் அருமை கணவரும் குஞ்சிறங்கன், ரவான், ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற ஸ்ரீரங்கன் மற்றும் ஸ்ரீரஞ்சன், ஸ்ரீராஜினி, ஸ்ரீராகுலன் காலஞ்சென்ற ஸ்ரீராகவன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2019) புதன் கிழமை பி.ப 12.30 மணியளவில் அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் (நாவலடி, பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

077 637 4301, 021 223 0028

மைத்துனர் செ.கேதீஸ்வரன்

# நாடாளுமன்றக் குழப்பங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு

## நாடாளுமன்று அனுமதி வழங்கின் நீதிமன்றுக்கு வரும்

**கொழும்பு, ஜன. 16**

**கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றில் ஏற்பட்ட குழப்ப நிலமைகள், அதனால் ஏற்பட்ட பொருள் இழப்புக்கள், சேதவிவரங்கள் மற்றும் மோதல்கள் குறித்த விசாரணை அறிக்கையைச் சட்டமா அதிபருக்கு அனுப்பத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சபை அனுமதி வழங்கினால் நீதிமன்றினூடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

மோதல்சம்பவங்களுடன்தொடர்புபட்ட நபர்களுக்குஎதிராகச்சட்டநடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சபாநாயகர்கருஜெயசூரியநாடுதிரும்பியவுடன்துரிதநடவடிக்கைகள்இடம்பெறும் என்று பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி ஆட்சிமாற்றத்தின்பின்னர்ஏற்பட்டஅரசியல் நெருக்கடிகளையடுத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய முதன்மைக் கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட அரசியல் முரண்பாடுகளின்போதுகடந்தநவம்பர் மாதம்14,15,16ஆம்திகதிகளில்நாடாளுமன்றில் மோதல்கள் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்துநாட்டில் குழப்பம் ஏற்பட்டது.

நாடாளுமன்ற வாரத்தில் ஏற்பட்ட குழப்பங்களின் போது அரச ஊழியர்களைத் தாக்கிய மற்றும் அரச சொத்துக்களைச் சேதமாக்கியநாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் எழுவர் கொண்ட நாடாளுமன்றவிசாரணைக்குழுவொன்றை சபாநாயகர்கருஜெயசூரியநியமித்திருந்தார்.

இந்தக்குழுவினர்சிலதீர்மானங்களை எடுத்திருந்தனர். குறிப்பாக நவம்பர் மாதம் ஏற்பட்ட முரண்பாடுகள் மற்றும் கலவரங்கள் குறித்த நாடாளுமன்றக் காணொலிகள்மற்றும்வாக்குமூலங்களைத்தயாரித்து சொத்துச்சேதவிவரங்களை மதிப்பீடு செய்து அறிக்கை ஒன்றைத் தயாரித்திருந்தனர். இந்த அறிக்கையைச்சபாநாயகர்கருஜெயசூரியவுக்கு ஒப்படைக்கவும் தீர்மானம் எடுத்திருந்தனர்.

இது குறித்து குழுவின் தலைவர் பிரதி சபாநாயகர்ஆனந்தகுமாரசிறிதெரிவித்ததாவது:

இறுதியாகக் கூடிய குழுக் கூட்டத்தில் நாம் அறிக்கை தயாரித்து வைத்துள்ளோம். சபாநாயகர்தற்போதுபொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார். அவர் நாடு திரும்பியவுடன்அறிக்கையைச்சபாநாயகரிடம் ஒப்படைப்போம். அவர் அறிக்கையை சட்டமா அதிபரிடம் கையளிப்பார். அறிக்கையில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது சட்ட நுணுக்கங்கள் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றால் அதனைச் சரிசெய்து சட்டமா அதிபர்மீண்டும்அறிக்கையைச்சபாநாயகருக்கு அனுப்புவார்.

அது குறித்து நாடாளுமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி மீண்டும் சட்டமா அதிபருக்கு வழங்கப்படும். அதன் பின்னர் நீதிமன்றத்தை நாடி உரிய நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த)

# புதிய பாதீடு வரும் வரையில் புதிய நியமனங்கள் வேண்டாம்

## திறைசேரிப்பணிப்பாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 16

புதிய வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் வரையில் புதிய நியமனங்கள் எவையும் வழங்க முடியாது. எவருக்கும்எந்தவொருநியமனமும்வழங்கக்கூடாதுஎன்று திறைசேரிப் பணிப்பாளர் நியமன அதிகாரிகளுக்கு எழுத்தில் அறிவித்துள்ளார்.

இலங்கையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம்இதுவரைசமர்ப்பிக்கப்படாதநிலையில்மேலதிகசெலவுகளுக்கான அனுமதி வழங் குவதில் உள்ள நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில் புதிய நியமனங்கள் எவையும் வரவு-செலவுத்திட்டம்நிறைவேற்றப்படும்வரையில்வழங்க முடியாது. 2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் இருந்த அரச பணியாளர்களுக்கான தொடர் சம்பளம் கணக்கறிக்கை மூலமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

புதிய நியமனம் வழங்கினால் அவர்களுக்கு ஊதியம் வழங்குவதில்சட்டநெருக்கடிஏற்படும். அதனைத்தவிர்க்கும்வகையில் 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பித்து அனுமதிக்கப்படும் வரையில் புதிய நியமனம் எவற்றையும் வழங்க முடியாது - என்று தெரிவிக்கப்படுகிறது. (த-105)

# தேசிய பொங்கல் பண்டிகை அலரி மாளிகையில் நேற்று

கொழும்பு. ஜன.16

தேசிய தைப் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் நடைபெற்றது. தலைமை அமைச்சர் அலுவலகமும், தேசிய நல்லிணக்கம், அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு இணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

விழாவுக்குமுதன்மைவிருந்தினராகத்தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக சமயத் தலைவர்கள், பன்னாட்டு இராஜதந்திரிகள், அமைச்சர் மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ், அமைச்சர்களான அர்ஜுன ரணதுங்க, தயா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், வேலுகுமார், எம்.திலகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலை நிகழ்வுகளும், விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன. (எ)

# நாயில்நோய்இனங்காணப்பட்டதையடுத்து 8நாய்களின்குருதிகள்ஆய்வுக்குச்சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16



முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயில் இனம் காணப்பட்ட ட்றைபனசோமா என்னும்நோயின் தாக்கம் தொடர்பில், அமைச்சிலிருந்து வந்திருந்த குழுவினர் 8 நாய்களின் மாதிரிகளைப் பெற்றுச் சென்றுள்ளனர். கொழும்புசுகாதார கால்நடைஅமைச்சின்ஆய்வுநிலையப்பொறுப்பதிகாரிஉட்பட்ட குழுவினர் 8நாய்களின்மாதிரியைப்பெற்றுச்சென்றுள்ளனர்என்று முல்லைத்தீவு மாவட்டக் கால்நடை வைத்திய அதிகாரி கௌரிதிலகன் தெரிவித்தார்.

இலங்கையில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய புதிய வகை நோய் ஒன்று முல்லைத்தீவில் நாய்களில் அடையாளங் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்தநோய் மனிதர்களுக்கும் பரவ வாய்ப்புள்ளதாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை பேராசிரியர் அஷோக் தங்கொல்ல தெரிவித்திருந்தார். அதன்படிசிறப்புஆய்வுக்காகக் குறித்த குழுவினர் முல்லைத்தீவுக்கு சென்றிருந்தனர்

இதுதொடர்பில்கேட்டபோதுவைத்தியர்மேலும்தெரிவித்ததாவது:

முல்லைத்தீவில்ட்றைபனசோமஎன்றுசந்தேகிக்கப்படும் நோய் நாய்களில்அடையாளம்காணப்பட்டுள்ளது. இந்த நோய்மனிதர்களுக்கும்தொற்றும்அபாயம்உள்ளதாகக் கூறப்பட்டது. அவ்வாறு இனங்காணப்பட்ட நாய் முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் இனம்காணப்பட்டது.

குறித்த நோய்த் தாக்கம் உள்ளதாகச் சந்தேகிக்கப்பட்ட நாய் தற்போது இறந்து விட்டது. அதேநேரம் அந்த நாய் வளர்க்கப்படபகுதியில்சந்தேகத்துக்குஇடமாகக்காணப்பட்ட 8 நாய்களின் குருதி மாதிரிகளை ஆய்வுக்காகப் பெற்றுச்சென்றுள்ளனர்.

தற்போது பெற்றுச் செல்லும் குருதி மாதிரிகளின் ஆய்வு அறிக்கை விரைவில் எமக்குத் அனுப்பி வைக்கப்படும் . அவை கிடைக்கப்பெற்ற பின்னர் குறித்த நிலமை தொடர்பில்நூறுவீதமாகஉறுதிசெய்யமுடியும்-என்றார். (த-105)

# அதிகாரிகள் குளறுபடி செய்ததால்தான் ஆசிரிய நியமனம் இழுபறிப்படுகிறது!

## விரைவில் வழங்குமாறு பட்டதாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 16

வடக்குமாகாணப்பட்டதாரிஆசிரியர்நியமனத்தில்குளறுபடிகாரணமாகவே நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள பட்டதாரிகள், நியமனத்தை விரைவுபடுத்துமாறு கேட்டுள்ளனர்.

வடக்குமாகாணப்பாடசாலைகளில்நிலவும்கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப ப் பாடங்களின் வெற்றிடங்களுக்காகப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. கிடைத்த விண்ணப்பங்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிடக்குறைவாகக்காணப்பட்டதனால் எழுத்துப்பரீட்சைஇன்றிநேரடியாகவேநேர்முகப்பரீட்சை எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் நிறைவடைந்ததால் வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதி பெற்று நியமனம்வழங்கப்படும்என்றுசுட்டிக்காட்டியிருந்தனர். சுமார் 400 வெற்றிடங்கள் உள்ள நிலையில் 300 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி நேர்முகத் தேர்வு இடம்பெற்றது. பட்டியலில் புதிதாகப் பட்டம்பெற்று வெளியேறிய நிலையில் உறுதிப்படுத்தல் சான்றிதழ் வழங்கப்படாத 34 பட்டதாரிகளும் உள்வாங்கப்பட்டனர். அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும் வரையில்காலம்கடத்தமுற்பட்டதனால்தான் ஏற்கனவே சான்றிதழ் பெற்ற 270க்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனம்கிடைக்கவில்லைஎன்றுசுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்ததாவது:

உறுதிப்படுத்தல் சான்றிதழைக் கையில் பெற்றுக்கொள்ளாத 34 பட்டதாரிகளும் விண்ணப்பித்திருந்தனர். அவர்களைத் தவிர்த்து ஏனையவர்களுக்கு நியமனம் வழங்க முற்பட்டபோதும் வழங்கப்படவில்லை. இதற்கான அனுமதியைப்பெற்று உரிய முறையில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி நேர்முகத் தேர்வு இடம்பெற்ற போதும்ஜனவரி 3ஆம் திகதிவரையில்ஆளுநர் வடக்கில் பணியாற்றிய காலத்தில் நியமன அனுமதியைப் பெற்று வழங்கியிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் டிசெம்பர் மாதமேநியமனம்வழங்கப்படும்என்றுமுன்னர்தெரிவிக்கப்பட்டமைக்கமைய வழங்கப்பட்டிருக்கும் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர். (த-105)

# மகிந்த சந்திரிகா இடையேயான கோபத்தை சுதந்திரக்கட்சியிலும்காட்ட முற்படாதீர்கள்!

## சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் விசனம்

கொழும்பு, ஜன. 16

எதிர்க்கட்சித்தலைவர்மகிந்தராஜபக்சவுக்கும்முன்னாள் அரசதலைவர் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவுக்கும் இடையே காணப்படும் தனிப்பட்ட கோபங்களுக்காக, சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதற்கேற்ப செயற்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச, "தான் அரசதலைவர் தேர்தலில் களமிறங்கத் தயார்என்றும்அதற்குஎதிர்க்கட்சித்தலைவர்மகிந்தராஜபக்ச மற்றும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன இருவரும்ஆதரவளித்துள்ளனர்"என்றும்தெரிவித்திருந்தார். இது குறித்துக்கேட்டபோது தயாசிறி மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தவுக்கும்சந்திரிகாவுக்கும்இடையேமுரண்பாடுகள் இருந்தால் அதற்காகக் கட்சி ஒன்றும் செய்யமுடியாது. அந்த இருவரின் பிரச்சினைகளுக்காகக் கட்சியைப் பாதிக்க விடக்கூடாது. அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடுத்த அரசதலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவைக் களமிறக்குவதில் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் உறுதியாக உள்ளனர். எனினும்இதுதொடர்பில்தனதுதனிப்பட்டகருத்தை மைத்திரிபால இன்னும் தெரிவிக்கவில்லை - என்றார். (த)

# இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கடல் அட்டைகள் கடற்படையால் மீட்பு

மன்னார்,ஜன.16
**இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான கடல் அட்டைகளை மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.**



வட மத்திய கடற்படை கட்டளையின் கடற்படையினர்கள் மன்னார் கடற்கரைப் பகுதியில் மேற்கொண்ட ரோந்துப் பயணத்தின் போது சட்ட விரோதமாக பிடித்த 12 பொதிகளைக்கொண்ட கடல் கடல் அட்டைகளை மீட்டுள்ளனர்.
மீட்கப்பட்ட கடலட்டைகள் 302 கிலோ கிராம் எடை கொண்டது எனவும்,பல இலட்சம் ரூபா பெறுமதியானது எனவும் தெரிய வருகின்றது. இதன் போது சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதோடு, கடல் அட்டைகளுடன் டிங்கி படகு , மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஒன்று என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்டுள்ள கடல் அட்டைகள், மற்றும் டிங்கி படகு , வெளி இணைப்பு இயந்திரம் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம், சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க-56)

# கணவன் மர்மச் சாவு கைதானார் மனைவி

மட்டக்களப்பு. ஜன. 16
சந்தேகத்துக்கு இடமான முறையில் வீட்டிலிருந்து கணவனின் சடலம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து மனைவி கைது செய்யப்பட்டார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.
வந்தாறுமூலை, மூங்கிலடி வீதியை அண்டியுள்ள வீட்டிலிருந்து 3 பிள்ளைகளின் தந்தையான குறித்த நபரின் சடலம் கடந்த 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த திங்கட் கிழமை மனைவி கைது செய்யப்பட்டார். (ம)

# பொகவந்தலாவையில் 10 அடி மலைப்பாம்பு



பொகவந்தலாவ, ஜன. 16
பொகவந்தலாவ கிலானி தோட்டத்துக்குச் செல்லும் முதன்மை வீதியில் பத்து அடி நிளம் கொண்ட மலைபாம்பு சிறப்பு அதிரடி படையினரால் கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பிடிக்கப்பட்டது.
குறித்த பகுதிவாழ் பொதுமக்கள் குறித்த தகவலை வழங்கியதை அடுத்தே குறித்த மலைப்பாம்பு பிடிக்கப்பட்டது என்றும், அது வனவிலங்குத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)



## மன்னாரில் களைகட்டிய தைப்பொங்கல்

மன்னார், ஜன.16
மன்னாரில் நேற்றைய தினம் தைப்பொங்கல் கொண்டாட்டம் களைகட்டியதோடு,மக்கள் சமய வழிபாடுகளில் ஈடுபட்டனர். உழைக்கும் மக்கள் இயற்கைக்கும்,ஏனைய உயிர்களுக்கும் நன்றி சொல்லும் ஒரு நாளாக இத்திருநாளை கொண்டாடுகின்றனர்.இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்கள் மற்றும் கத்தோலிக்க தேவாலயங்களில் தைப்பொங்கல் நிகழ்வு இடம்பெற்றதோடு, சிறப்பு வழிபாடுகளும் இடம் பெற்றன.
மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் பொங்கல் பொங்கி கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

# காணி நடுவர் சபையிடம் 370 முறைப்பாடுகள்



வவுனியா.ஜன.16
காணிப் பிணக்குகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக 370 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட சிறப்புக் காணி நடுவர் சபைத் தவிசாளர் இரட்ணசிங்கம் நவரட்ணம் தெரிவித்துள்ளார்.
அவர் இது தொடர்பில் நேற்று தெரிவித்ததாவது:
வவுனியா மாவட்ட காணிப் பிணக்குகளுக்கு விரைவாகவும், சுமுகமாகவும் தீர்வு காணும் முகமாக நீதி அமைச்சின் கீழ் நடுவர் சபை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட சிறப்பு காணி நடுவர் சபையிடம் பிணக்குகளுக்குத் தீர்வு காணுமாறு இதுவரை 370 முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.
இந்த முறைப்பாடுகள் தொடர்பாக விரைவில் இரு தரப்புக்களையும் அழைத்து கலந்துரையாடப்பட்டு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேலும் காணிப் பிணக்குகள் தொடர்பான விபரங்கள் இருப்பின் எம்மிடம் சமர்ப்பிக்க முடியும். பெற்றுக் கொள்ளப்படும் பிணக்குகள் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.
அத்துடன், காணிப் பிணக்குகளை நேரடியாக அல்லது தபாலில் இ.நவரட்ணம், தவிசாளர், சிறப்பு காணி நடுவர் சபை, இல 384/1, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-110)



## பதினொரு இந்திய மீனவர்கள் நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைப்பு

கிளிநொச்சி, ஜன.16
கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 11 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டு கிளிநொச்சி நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன் தினம் கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி கடற்பரப்பில் படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 16 இந்திய மீனவர்களைப் பாதுகாப்பாக கரை சேர்த்தனர்.
11 மீனவர்களுக்குமான அடிப்படைத் தேவைகள் மற்றும் இதர செயற்பாடுகள் இந்திய தூதரகம் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என நீரியல் வளத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-6)

## புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வு

வவுனியா, ஜன.16
வவுனியா, புதுக்குளம் கனிஸ்ட வித்தியாலயத்தில் புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வு நாளை காலை 10 மணியளவில் வித்தியாலய அதிபர் திருமதி சொக்கலிங்கம் கமலாம்பிகை தலைமையில் நடைபெற உள்ளது. முதன்மை விருந்தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுரேந்திரன் அன்னமலர் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (க-222)


# 50 வெளிநாட்டு மதுபானப் போத்தல்களுடன் பிரான்ஸ் நாட்டுப் பிரஜை ஒருவர் கைது

மட்டக்களப்பு.ஜன.16
சட்டவிரோதமான முறையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 50 லீற்றர் வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், விற்பனையில் ஈடுபட்ட பிரான்ஸ் நாட்டுப் பிரஜை ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மதுவரி அத்தியட்சகர் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள், நிலையங்களைத் தடை செய்யும் வகையில் சுற்றி
வளைப்பு நடவடிக்கைகள் மட்டக்களப்பு மதுவரி அத்தியட்சகர் அலுவலக் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மட்டக்களப்பு மதுவரி அத்தியட்சகர் அலுவலக பொறுப்பதிகாரி த. தயாலீஸ்வரகுமார் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மதுவரி அத்தியட்சகர் அலுவலக அதிகாரிகளுக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலுக்கு



அமைய, மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை கும்புறுமூலை பகுதியில் மதுவரி அத்தியட்சகர் அலுவலக அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், சட்டவிரோதமான முறையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 50 லீட்டர் வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், விற்பனையில் ஈடுபட்ட பிரான்ஸ் நாட்டு பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு மதுவரி அத்தியட்சகர் அலுவலர்களினால் கைப்பற்றப்பட்ட மதுபான போத்தல்களையும் கைது செய்யப்பட வெளிநாட்டு நீதி மன்ற சட்ட நடவடிக்கைகளுக்காக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் மாலை முற்ப டுத்தப்பட்ட போது குறித்த நபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.







## வடக்கு,...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீடுகள் அமைக்கும் யோசனை 2016ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டது. பொருத்து வீடா, கல் வீடா என்ற முரண்பாடு ஏற்பட்டது. அதன் பின்னர் அமைச்சரவைக்குள் காணப்பட்ட பிடுங்குப்பாடு, ஆட்சி மாற்றம் என்று மிக நீண்ட இழுபறியின் பின்னர், வீடமைப்புப் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

10 ஆயிரம் வீடுகளில் முதல் கட்டமாக 4 ஆயிரத்து 750 வீடுகள் கட்டப்படவுள்ளன. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சுக்கு ஊடாக இந்த வீடுகள் கட்டப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 500 குடும்பங்களும், கிளிநொச்சியில் 670 வீடுகளும், முல்லைத்தீவில் 630 வீடுகளும், வவுனியாவில் 450 வீடுகளும், மன்னாரில் 350 வீடுகளும், மட்டக்களப்பில் 625 வீடுகளும், திருகோணமலையில் 400 வீடுகளும், அம்பாறையில் 125 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 500 வீடுகளில், மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு 500 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்தப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தென்மயிலை (ஜே/240) கிராம அலுவலர் பிரிவில் முதலாவது வீட்டுக்கான அடிக்கல் நடப்பட்டது.

வீட்டு உரிமையாளர், 1990ஆம் ஆண்டு போரால் இடம்பெயர்ந்து, அளவெட்டி கணேஸ்வரன் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தனர். இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து கடந்த ஆண்டு ஏப்ரல் 13ஆம் திகதி தென்மயிலை விடுவிக்கப்பட்ட பின்னர் குடியமர்ந்தனர். கொட்டிலில் கடந்த 9 மாதங்களாக வசித்து வந்த நிலையில், வீடமைப்புத் திட்டத்தில் வீடு வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுக்கான அடிக்கல்லை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன், வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் நட்டு வைத்தனர். தென்மயிலை கிராம அலுவலர் பிரிவில், மற்றுமொரு வீட்டுக்கான அடிக்கல்லும் நட்டு வைக்கப்பட்டது.

இதன் பின்னர் மயிலிட்டி வடக்கு (ஜே/246) கிராம அலுவலர் பிரிவில், போரால் இடம்பெயர்ந்து அளவெட்டி கும்பளை நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பத்துக்கு வீடமைப்புத் திட்டத்தில் வீடு வழங்கப்பட்டுள்ளது. அந்த வீட்டுக்கான அடிக்கல்லும் நேற்று நடப்பட்டது. மயிலிட்டி வடக்கில், போரால் இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் தங்கியிருந்து மீளக்குடியமர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட வீட்டுக்கான அடிக்கல்லும் நேற்று நடப்பட்டது. நான்கு வீடுகளுக்குமான அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா நட்டு வைத்தார்.

'இடைக்கால கணக்கு அறிக்கை ஊடாக வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஆயிரத்து 500 வீடுகளே கிடைக்கப் பெற்றுள்ளன. எஞ்சியோருக்கான வீட்டுத் திட்டம், இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டு அதன் ஊடாக கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கின்றோம்' என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 ஆயிரம் பேரின் பெயர்ப் பட்டியல் வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

## அரசமைப்பு...

இவ்வாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களிடம் தேசிய இணக்க சம்மேளனம் கோரியுள்ளது.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய தேரர்களை நேற்றுச் சந்தித்தபோதே தேசிய இணக்க சம்மேளனம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் ரணிலுடன் செய்துகொண்ட ஒப்பந்தமே அரசமைப்பாக வெளிவருகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, சிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க இந்த முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

இந்த நாட்டில் 72 வீத சிங்களவர்கள் உள்ளனர். அவர்களின் கருத்துக்களை கவனத்தில் கொள்ளாது சிறுபான்மைக்குச் செவி மடுத்து அரசமைப்பை உருவாக்கப் பார்க்கின்றனர். பிரபாகரன் கொல்லப்பட்டவுடன் பிரச்சினைகள் அனைத்துமே முடிவுக்கு வந்துவிட்டன. நந்திக்கடல் போரே அவர்களுக்கான தீர்வு. இப்போது புதிய தீர்வுகளை கூறிக்கொண்டு சுமந்திரன் போன்றவர்கள் வரவேண்டிய அவசியம் இல்லை. இந்த முயற்சிகள் இலங்கையின் முயற்சிகள் அல்ல. பன்னாடுகளின் முயற்சிகள் என்று அந்தச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த சம்மேளனத்தில் குணதாச அமரசேக, வசந்த பண்டார, சரத் வீரசேகர ஆகியோரும் பௌத்த பிக்குகள் பலரும் அங்கம் வகிக்கின்றனர். (எ)

## வவு...

நீரில் தவறி விழுந்துள்ளார். இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் வவுனியா பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-110,105)

## நாச்சிமார்...

நடந்துள்ளது. அதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

6 மோட்டார் சைக்கிளில் வந்த சுமார் 13 பேர் அந்தப் பகுதியில் நின்ற இளைஞர்கள் மீது இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் 3 மோட்டார் சைக்கிள்களும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

காயமடைந்த இளைஞர் ஒருவரின் கைவிரல் துண்டாடப்பட்டுள்ளது என்றும் மற்றையவருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்

பொங்கல் தினமான நேற்று மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் ஆலயத்துக்கு அண்மையில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்தனர். (எ-37,8)

## உறவுகளைத்...

சென்று நீதிமன்ற வீதி வழியாக தாம் தொடர் போராட்டம் நடத்தும் இடத்துக்கு ஊர்வலமாகச் சென்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

"எமது பிள்ளைகள் வந்தாலே எமக்குச் சுதந்திரப் பொங்கல். இன்றுடன் (நேற்று) 694 நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எங்களுக்கு இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை. அரச தலைவரிம் கோரியும் தீர்வு கிடைக்கவில்லை. அதனால் பன்னாடுகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம். காலத்தை இழுத்தடிக்காது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் கோரிக்கை விடுகின்றோம் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை பன்னாட்டு வழிமுறையில் தேடிக் கண்டறிந்து மீட்க அமெரிக்காவை அழைக்கின்றோம் என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் கொடிகளையும் ஏந்தியிருந்தனர். (எ-110,111)

## லஞ்சம்...

பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அபிவிருத்தி உத்தியோகத்தரான அந்தப் பெண் உத்தியோகத்தர் பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை வழங்கும்போது 15 ஆயிரம் ரூபா பணம் இலஞ்சமாகக் கோருகின்றார் என்று பயனாளி ஒருவரால் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இலஞ்சப் பணத்தைப் பிரதேச செயலகம் முன்பாக உள்ள ஒரு தேநீர் கடையில் வைத்தே வழங்கப்படுகின்றது என்று ஆணைக்குழுவுக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஆராய்வதற்கு ஆணைக்குழுவின் அதிகாரிகள் சிலர் கொழும்பில் இருந்து பொலிஸார் சகிதம் வந்திருந்தனர்.

அவர்களில் இருவர் நேற்று சிவில் உடையில் வழிப்போக்கர்கள் போன்று அந்தத் தேநீர் கடையில் தேநீர் அருந்தியுள்ளனர். பயனாளி ஒருவர் காசோலையைப் பெறுவதற்கான லஞ்சப் பணத்தை தேநீர் கடையில் வைத்து அந்த பெண் உத்தியோகத்தரிடம் கொடுத்தபோது, ஒளிப்பட ஆதாரம் சகிதம் அவரைக் கைது செய்தனர்.

இந்த உத்தியோகத்தர் நீண்டகாலம் திருகோணமலை மாவட்டத்தில் பணியாற்றி சில மாதங்களுக்கு முன்னரே பூநகரிப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இலஞ்சம் பெற்றமைக்காக அந்த உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டமையை கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலரும் உறுதி செய்தார். (எ-105)

## பிலிப்பைன்ஸ்...

வாய்ப்பு, உயர்கல்வி, விவசாயம் என ஆறு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் இதன்போது கைச்சாத்திடப்படவுள்ளன. அதற்கு அமைச்சரவையும் அனுமதியளித்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் அரச தலைவர் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகப்பூர்வ வெளிநாட்டு பயணம் இதுவாகும். (எ)

## பொருளாதாரச்....

பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

விரைவாக முதலில் மாகாண சபைத் தேர்தலை நடந்த அரசு முன்வர வேண்டும். 2020 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஒரு புதிய நிறைவேற்று அரச தலைவர் நியமிக்கப்பட முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் உட்பட பிற தேர்தல்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாடாளுமன்றம் அரச நிதியைப் பொறுப்பேற்றுள்ளது. ஆனால் நாடாளுமன்றத்தில் ஒரு புதிய வேலைத்திட்டத்தை கொண்டுவராமல் நிதி நெருக்கடியைத் தீர்க்க முடியாது - என்றார். (எ)

## அதிகாரத்தை...

களில் ஈடுபட சிலர் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு முயற்சிக்கின்றார்கள். மோசடி மற்றும் பல்வேறு குற்றம் சாட்டப்பட்டவர்களை நியமிக்க இந்த அரசு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

தனிநபர் ஒருவர் மோசடி செய்தவர்களுக்கும் ஊழல் செய்தவர்களுக்கும் ஆதரவாக மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கிறார் - என்றார். (எ)






## தைப்பொங்கல் தினத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

வவுனியாவில்நேற்றுடன்694நாள்களாகப்போராடிவரும்காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினாகளால் ஆர்ப்பாட்டப்பேரணிஒன்று நேற்று மதியம் 12 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா கந்தசாமிஆலயத்தில்சிறப்புப்பூசை வழிபாடுகளை மேற்கொண்டதுடன், பசார் வீதிவழியாக மருத்துவமனை சுற்றுவட்டத்தை அடைந்து போராட்டம் மேற்கொள்ளும் பகுதிக்குச் சென்றனர். இதன்போது ஐரோப்பியஒன்றியம்மற்றும்அமெரிக்க நாட்டினது கொடிகளையும் கையில்ஏந்தியிருந்தனர். (க-110)

# வவுனியா மடுக்குளத்தில் வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா, ஜன.16

**வவுனியா மடுக்குளம் பகுதியில் உள்ள தோட்டக்காணியில் இருந்து வெடி பொருள்களைப் பூவரசங்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.**



கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக வவுனியா மடுக்குளம் பகுதியில் உள்ள தனியார் காணியை உரிமையாளர் உழவியந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார்.

பண்படுத்தப்பட்ட காணியில் சிறுவன் ஒருவன் விளையாடச் சென்ற நிலையில் உரப்பொதியில் சுற்றிவைக்கப்பட்டுச் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இருப்பதை அவதானித்துத் தனது தந்தைக்குத் தெரியபடுத்தியுள்ளான்.

குறித்த விடயம் பூவரசங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதும், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் உரப்பொதியை சோதனை செய்து பார்த்த போதுமூன்றுகைக்குண்டுகள்மற்றும்ரி56ரகத்துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள், கோல்சர் என்பவற்றை அவதானித்ததாகத் தெரிவித்தனர்.

எனினும் மண்ணில் புதையுண்டு கிடப்பதால் மேலும் வெடிபொருள்கள் அதனுள் இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார்சம்பவம்தொடர்பாக சிறப்பு அதிரடிப் படையினருக்குத் தகவல்தெரிவித்தனர்.

நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த பகுதியை ஆழமாக்கிச் சோதனை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தில் இருந்து அண்மையிலும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-110)



## மாமரக்கன்றுகள் நட்டுவைப்பு

வவுனியா, ஜன.16

'தேடல் இளைஞர்கள் அமைப்பினர்' பொங்கல் தினத்தை முன்னிட்டு வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் 20 மாமரங்களை நட்டுவைத்தனர். மாற்றுத்திறனாளரான கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினராக மாவட்ட சமூகசேவை அலுவலர் செ.சிறிநிவாசன் கலந்து கொண்டார். (க-222)

## தற்காலிக வீடு கையளிப்பு

வவுனியா, ஜன.16

பொங்கல் தினத்தை மகிழ்வாகக் கொண்டாடும் வகையில் வவுனியா தாலிக்குளம் பகுதியில் வசிக்கும் பேருந்தில் கச்சான், பழங்கள்வியாபாரத்தில்ஈடுபட்டுநாளாந்தம்பிழைப்பு நடத்திவரும்குடும்பத்துக்கு, அமெரிக்காவில்இயங்கிவரும் இலங்கை தமிழர் சங்கத்தின் 'ஸ்டேட்டன் ஐலண்ட்'கிளை ஒரு இலட்சத்து 73 ஆயிரம் ரூபா செலவில் இரண்டு அறைகளுடன்கூடியதகரவீடுஒன்றினை அமைத்துக்கொடுத்துள்ளனர்.

கடுமையான மழைக்காலங்களில் வாழ்வதற்குப் பொருத்தமற்ற ஓலைக்குடிசை வீட்டுக்குப் பதிலாகவே இந்த வீடு வழங்கி வைக்கப்பட்டது. வீடு கையளிப்பு நிகழ்வில் மாகாணசபைமுன்னாள்உறுப்பினர்செ.மயூரன், வெளிச்சம் குடும்ப அறக்கட்டளை நிறுவனத் தலைவர் க.ஜெயக்குமார், மாவட்ட சமூக சேவை அலுவலர் செ.சிறிநிவாசன், கிராம அலுவலர் றூபன், அபிவிருத்தி அலுவலர் கிருஷ்வசந்தன், ஒன்னூர்நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-222)







## மன்னாரில் நடைபெற்ற சாரணிய தலைவிகளுக்கான பயிற்சி

மன்னார், ஜன.16

இலங்கைப்பெண்கள்சாரணியர் சங்கமும், மன்னார் வலயக் கல்விப்பணிமனையும் இணைந்து நடத்தும் மன்னார் சாரணியர் தலைவிகளுக்கான பயிற்சி, இரண்டு நாள் நிகழ்வாக கடந்த 12,13ஆம்திகதிகளில் புனிதசவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

பெண்களின் ஆளுமை, தலைமைப்பண்பு, சூழலுக்கு ஏற்றால் போல் செயல்ப்படுதல், தற்பாதுகாப்பு, எந்த நேரத்திலும் தயார் நிலையில் இருத்தல், செயற்பாடுகளைதாமாகவேசெய்தல்செயற்படுத்தல் போன்ற பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டு சமூகத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதில் பயிற்றுநர்களாகத் திருமதி றொபினா மல்லிகா மற்றும் தயானி நிலக்சி ஆகியோருடன் மன்னார் கேர்ள்ஸ் கைட்ஸ் அசோசியேர்சன் ஆசிரியர்கள் 25 பேர் கலந்து கொண்டனர். இவ்வாறான பயிற்சிப் பாசறைகள்தொடர்ச்சியாகநடைபெறவுள்ளன என்றும் ஏற்பாட்டாளர்களால்தெரிவிக்கப்பட்டது. (க-213)

## நானாட்டான் ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் பொங்கல் விழா

மன்னார், ஜன. 16

நானாட்டான் பங்கின் முதன்மை ஆலயமாகிய தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் உழவர் திருநாளாகியபொங்கல்விழா சிறப்பாகநடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி யூட் குரூஸ் அடிகளார் தலைமையில்திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில்ஏராளமானமக்கள்கலந்துகொண்டார்கள். திருப்பலி நிறைவில் அதிகாலையில் பொங்கிய பொங்கல் வருகை தந்திருந்த மக்களுக்கு வழங்கப்பட்டது. (க-213)



# வீதிப் போக்குவரத்து முறைகளை பொலிஸார் கடைப்பிடிக்கின்றனரா?

## பொலிஸாரிடம் கேட்கின்றனர் பொதுமக்கள்

வீதி ஒழுங்குகள் தொடர்பில் மக்களுக்குபோதிக்கும்பொலிஸார் அந்தநடைமுறையினைதாமே கடைப்பிடிப்பதில்லை எனப் பொதுமக்களால் சுட்டிக்காட்டப் படுகின்றது.



வீதிகளில்உந்துருளிகள்உட்பட எந்த வாகனங்களைச் செலுத்தும்போதும் அலைபேசி உரையாடுவது போக்குவரத்து விதிமுறைகளை மீறியதாகவே கருதப் படும். அவ்வாறு பயணிப்பவர்கள்தொடர்பில்பொலிஸார் நீதி மன்றின் முன் நிறுத்தி குற்றப் பணம் செலுத்த வைப்பர். இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில்பணியாற்றும் பொலிஸார் ஒருவர் பொலிஸ் திணைக்கள வாகனத்தைவீதியில்செலுத்தும்போது அலைபேசி உரையாடியவாறேவீதியில் வாகனத்தை செலுத்திச் செல்கின்றார். (105)

### உருவப்படத்திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜன.16

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆசிரியர் காந்திய வாதி கனகநாயகத்தின் உருவப் படத்திறப்பு விழா பட்டிப் பொங்கல் தினமான இன்றுபுதன்கிழமைகாரைநகர் கணபதி ஈஸ்வரக்குருக்கள் நூல் நிலையத்தில் மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் காரைநகர்ஐயனார்ஆதின கர்த்தா எஸ். சோமசேகரம் கலந்துகொண்டுஉருவப்படத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (ஐ)

### கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில ஒருவர் கைது

வடமராட்சி,ஜன.16

சண்டிலிப்பாய் பகுதியில் 750 மில்லி லீட்டர் கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே மானிப்பாய்பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இவரிடம்இருந்து25லீட்டர் கோடா,கசிப்புஉற்பத்திஉபகரணங்கள் என்பனவும் மீட்கப்பட்டதாகபொலிஸார் தெரிவித்தனர். (ஐ-26)

### இந்துக் கல்லூரியின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பொங்கல் விழா தமிழ்கலாசாரநிகழ்வுகளுடன்நேற்றுசிறப்பாக நடைபெற்றது. நிகழ்வின்ஆரம்பமாக கல்லூரியின் முன்றலில்கோலாட்டம்,கம்புசுற்றல், குதிரையாட்டம் போன்றபல்வேறுகலாசார நிகழ்வுகளுடன் நடைபவனி ஆரம்பித்து கே.கே எஸ் வீதியூடாக கஸ்தூரியார் வீதியை வந்தடைந்து மீண்டும் கல்லூரி மைதானத்தை வந்தடைந்தது மைதானத்தில் தமிழ் மரபு சார்ந்தவீரவிளையாட்டுகள் இடம் பெற்றன. நிகழ்வில் வடக்குமாகாண ஆளுனர் சுரேன் ராகவன் கலந்து கொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். இதில்பாடசாலைமாணவர்கள்,ஆசிரியர்கள்,பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.(ஐ7)

## யாழ். போதனா மருத்துவமனையில்

# விபத்துசிகிச்சைப்பிரிவு 7 ஆம் திகதி திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.16

**யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில்600மில்லியன்ரூபாசெலவில்அமைக்கப்பட்டவிபத்துசிகிச்சைப் பிரிவு எதிர்வரும் 7 ஆம் திகதி மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவினால் திறந்து வைக்கப்படவுள்ளதாக மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

இந்தவிபத்துசிகிச்சைப்பிரிவில்100பேர்தங்கக்கூடிய கட்டில் வசதிகளுடன் 3 சத்திர சிகிச்சைக் கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதேநேரம்ஓர்அவசரசிகிச்சைக் கூடமும் இங்கே காணப்படும் இதன் மூலம் விபத்தில் காயமடையும் நோயாளர்கள் நேரடியாகவேஇந்தவிடுதியில்சேர்க்கப்படுவதோடு சாதாரண நோயாளர்கள் மற்றும் குணமடையும் நோயாளர்களும்நேரடியாகவேவெளியேறும் வசதிகளும் ஏற்படுத்தப்படும். எனத்தெரிவித்தார். (ஐ-105)

# அதிபர் இன்மையால்கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு

## பெற்றோர்கள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கடந்த ஒரு வருடமாக அதிபர்இன்மையால்கல்விநடவடிக்கைகள்பாதிக்கப்படுவதாகபெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

வித்தியாலயத்தில்அதிபராககடமையாற்றிய த.சோதிலிங்கம் எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயத்துக்குகடந்தமார்ச்மாதம்முதலாம்திகதிஅதிபராகஇடமாற்றம்செய்யப்பட்டதையடுத்து பிரதி அதிபரின் நிர்வாகத்தில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.நிரந்தரஅதிபர்இல்லாததால்பாடசாலை அபிவிருத்தி வேலைகளும் தாமதமடைவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் வித்தியாலய வளாகத்தில் வகுப்பறைத் தொகுதி அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுநிர்வாகத்திடம்கையளிக்கப்பட்ட நிலையில் அதிபர் இன்மையால் அதனைத் திறந்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு வழங்கப்படவில்லையெனவும்தெரிவித்தனர்.

பாடசாலைவகை11ஐச்சேர்ந்த இவ்வித்தியாலயத்துக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டு ஆறு மாதங்களாகியும்அதிபரைநியமிக்கவில்லையெனவும்பெற்றோர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் மாகாணக் கல்வித் திணைக்களமோ, வலயக்கல்வி அலுவலகமோ அக்கறைசெலுத்தி குறித்த பாடசாலைக்கான அதிபரை நியமிக்குமாறும்கோரிக்கைவிடுத்தனர்.(ஐ-159,9)



# தைப்பொங்கல் விழா

உழவர் திருநாளாம் தைத் திருநாளை முன்னிட்டு நேற்று நாடெங்கிலும் பரவலாக தைப்பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. ஆலயங்கள்,தேவாலயங்கள்,வீடுகள், வர்த்தக நிலையங்கள் எனப் பல பகுதிகளிலும் பொங்கல் பொங்கி சூரியவழிபாடுகள் இடம்பெற்றன.



யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூகநிலையத்தின்ஏற்பாட்டில்பொங்கல்விழாநேற்று நிலைய முன்றலில் தலைவர் அ.தயான் தலைமையில் இடம் பெற்றது. பொங்கல் விழாவில் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ஐ-23)



நாட்டில் சமாதானம், சாந்தி நிலவ வேண்டி சிறப்புப் பொங்கல் வழிபாடுகள் நீர்வேலி கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்றுநீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் வி.வேணுகோபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் நீர்வேலி கந்தசுவாமி ஆலய முதன்மைக் குரு சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். (ஐ-17)



வவுனியா பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினாலும் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினாலும் பொங்கல் விழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

### சிறி சுப்பிரமணிய வித்தியசாலை கால்கோள் விழா அழைப்பிதழ்

முல்லைத்தீவு.ஜன.16

முல்லைத்தீவு சிறி சுப்பிரமணிய வித்தியசாலை கால்கோள் விழா நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதேச செயலர் திருமதி நவரத்தினம் செல்வராசாவும்,சிறப்பு விருந்தினர்களாக திருமதி.சிந்தாமணி ஆனந்தராசா, மதிப்புறு விருந்தினர்களாக தொழில் வழிகாட்டல் அதிகாரி வலயக் கல்விப்பணிமனை முல்லைத்தீவு மாணிக்கராசா ருபினன், மதி உணவகம் மற்றும் மதி வேளான் சேவை உரிமையாளர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-222)

### கூட்டுறவுச் சங்கத்தின் பொங்கல் விழா


யாழ்ப்பாணம்பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின் பொங்கல் நிகழ்வு சங்க வளாகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது. சங்கத்தின் தலைவர் என்.எஸ்.சத்தியதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பணிப்பாளர்கள் ஒன்று சேர்ந்து சக்கரைப் பொங்கல் பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (ஐ-17)

# யாழ்.மாநகர சபைப் புதிய கட்டடத்துக்கான ஆரம்பப் பணிகள் காலாண்டுக்குள் முடியும்

## சபையின் 70ஆவது ஆண்டு நிகழ்வில் மாநகர முதல்வர் ஆனோல்ட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாண மாநகர சபைக்கே உரிய இடத்தில் புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான ஆரம்பமுயற்சிகளை இந்தக்காலாண்டுக்குள்ளே நடத்தி முடிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.



இவ்வாறு யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகரசபை ஆரம்பிக்கப்பட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டி மாநகர சபையில் நேற்றுமுன்தினம் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம் மானுவல் ஆனல்ட், பிரதி முதல்வர் து.ஈசன், மாநகரசபை உறுப்பினர்கள், மாநகரஆணையாளர், பிரதி ஆணையாளர், மூத்த அலுவலர்கள், ஊழியர்கள், திணைக்களத் தலைவர்கள்,ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதில் உரையாற்றுகையில் ஆனல்ட் மேலும் தெரிவித்ததாவது:

மாநகரத்தினுடைய பல்வேறு நிகழ்வுகளை, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையோடு பல்வேறு திட்டங்கள்,உலக வங்கியின் அனுசரணையோடு பல்வேறு திட்டங்கள் மற்றும் இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆண்டாக இந்த ஆண்டை நாங்கள் பார்க்கின்றோம்.

மாநகர சபையை மக்கள் பிரதிநிதியாகிய நாம் பொறுப்பெடுத்து 9 மாதங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் நாங்கள் பல்வேறு விடயங்களை அவதானித்திருக்கின்றோம். மாநகரசபையில் பல்வேறு விடயங்கள் முன்னோக்கி நகர்த்தப்படவேண்டி இருக்கின்றன.

எங்களுடைய அலுவலர்கள், ஊழியர்கள் மன நிலையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக உள்ளக ரீதியாகச் சில முன்னேற்பாடுகளைச் செய்திருக்கின்றோம்.

மாநகர சபைக்குத்தான் அதிகமான பயனர்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தருகின்றனர்.

அவர்களை நல்ல முறையில் வழிநடத்தித் தேவையை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்திலும் மாநகர வளாகத்தை விட்டு வெளியேறும்போது வெறுப்படையாது, நடத்தப்பட்டு திருப்தியாகத் தனது தேவையை முடிக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் செல்ல வேண்டும் என்பதுதான் எனது பேரவா.

மக்கள் பிரதிநிதிகளும் சரி, அரச உத்தியோகத்தர்களும் சரி மக்களுக்குச் சேவை செய்ய வந்தவர்கள் என்ற உள்ளுணர்வைநாங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சேவை வழங்கும் அலுவலர்கள் பல்வேறு சிக்கல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுப்பவர்களாக இருப்பீர்கள். அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் அவைசேவைகளைப் பெற வரும் பயனர்கள் மீது காட்டப்படக்கூடாதவை. பயனர்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்கள்திருப்தியடையும் விதமாக எமது சேவைகள் அமைய வேண்டும் - என்றார்.

வடக்கு மாகாணசபை உருவாக்கிய மாகாண கீதம் மாகாண சபைக்கு வெளியே முதலாவதாக யாழ்ப்பாண மாநகர சபையில் நேற்றுமுன்தினம் இசைக்கப்பட்டது. (105)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நபருக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஜன. 16

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பொதுமக்கள் கொடுத்த முறைப்பாட்டினையடுத்து சாவகச்சேரி பொலிஸார் குடியிருப்பினைச் சோதனையிட்டபோது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டது. (ஐ-9)

## ஏறாவூர் முறக்கொட்டாஞ்சேனையில் தவறான முடிவால் பெண் உயிரிழப்பு!

### பொங்கல் கொண்டாட முடியவில்லை என்ற கவலையே காரணம் என்று உறவினர் தகவல்

மட்டக்களப்பு, ஜன. 16

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள முறக்கொட்டாஞ்சேனை கிராமத்திலுள்ள வீடொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டது. பொங்கல் கொண்டாட முடியவில்லை என்ற கவலையில் அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் இந்த வருட ஆங்கிலப் புத்தாண்டுக்கு கடன் அடிப்படையில் புத்தாடைகள் வாங்கினார் என்றும் அந்தக் கடன் இன்னமும் தீர்க்கப்படாமலிருக்கும்போது தைப் பொங்கலுக்கு புத்தாடை வாங்க வழியில்லாமல் திண்டாடினோம். இதனால் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று கணவன் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ம)

## திருவாசகஅரண்மனையில்திருவாசகமுற்றோதல்



யாழ்ப்பாணம்நாவற்குழிசிவபூமிதிருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதல்கடந்தசனிக்கிழமைகாலை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும்தமிழ்ச்சங்கஉபதலைவருமாகிய கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில்நடைபெற்றநிகழ்வில்அமெரிக்கா ஹவாய்ஆதீனத்தைச்சேர்ந்ததொண்டுநாத சுவாமிகள் ஆசியுரை வழங்கி நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

வேதாந்தமடசுவாமிகள்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகஇந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் உள்ளிட்ட திருவாசக ஆர்வலர்கள் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

## பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு

# மாணவரை இணைக்கும் கால்கோள் விழா நாளை

தென்மராட்சி, ஜன.16

2019 ஆம் ஆண்டில் தரம் ஒன்று மாணவர்களை பாடசாலைகளில் இணைக்கும் கால்கோள் விழா நாளை வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் அனைத்து ஆரம்பப் பிரிவு உள்ள பாடசாலைகளில் இடம்பெறவுள்ளன.

பாடசாலைகளில் கடந்த வருடம் தரம் ஒன்று வகுப்பில் இணைந்த மாணவர்கள் புதிதாக இணையவுள்ள மாணவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயத்தின் தரம் ஒன்று மாணவர்களை வகுப்புகளில் இணைக்கும் வலய நிலை கால்கோள்விழா இம்முறை கெற்பேலி அ.த.க. பாடசாலையில் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் க.ஞானராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய நிர்வாக அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-9)

*** *** ***

கொடிகாமம், ஜன. 16

யாழ்ப்பாணம் மிருசுவில் றோ .க த.க பாடசாலையின் கால்கோள் விழா பாடசாலைமண்டபத்தில் நாளைவியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மிருசுவில் நீக்கிலார் தேவாலயஅருட்தந்தைஎக்ஸ்டபிள்யூ ஜேம்ஸ்கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-159)

*** *** ***

சாவகச்சேரி ஜன. 16

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தரம் ஒன்று மாணவர்களை இணைக்கும் கால்கோள்விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியில் இடம்பெறும்.

கல்லூரிஅதிபர்திருமதில.முகுந்தன்தலைமையில்நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிகல்விவலய அழகியல்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்னவும், சிறப்பு விருந்தினர்களாகதேசியசேமிப்புவங்கியின்சாவகச்சேரி கிளை முகாமையாளர் அ.கெங்காதரன், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இ.ஜீவேந்திரா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)

*** *** ***

சாவகச்சேரி, ஜன. 16

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா வித்தியாலய கலையரங்கில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

வித்தியாலயஅதிபர் இ.நாகேந்திரன்தலைமையில்நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக்கல்விவலய தொழில்வழிகாட்டல்அதிகாரிஅ.மனோரஞ்சிதன் கலந்து கொள்ளவுள்ளார்.

வித்தியாலய மாணவர் நாடாளுமன்றத்தின் ஏற்பாட்டில் காலை பொங்கல் விழா நடைபெற்று புதிய மாணவர்கள் அழைத்துவரப்பட்டு சமய நிகழ்வுகளின் பின்னர் வகுப்புகளுக்குஅழைத்துச்செல்லும்நிகழ்வு இடம்பெறும்என்று அதிபர் தெரிவித்தார். (ஐ-9)

*** *** ***

கொடிகாமம், ஜன 16

யாழ்ப்பாணம்கொடிகாமம்போக்கட்டிஅ த.கபாடசாலையின் கால்கோள் விழா பாடசாலை மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் நண்டபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கைதடி சித்த போதனாமருத்துவமனையின் மூத்தமருத்துவர் ஐ.ஜெபநாமகணேசன், சிறப்புவிருந்தினராகபோக்கட்டிஅ.த.க. பாடசாலையின்ஓய்வுபெற்றஆசிரியர்பொ.திருப்பதிஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

*** *** ***

கொடிகாமம்,ஜன.16

யாழ்ப்பாணம் கெற்பேலி அ.த.க பாடசாலையின் கால்கோள்விழாநாளைவியாழக்கிழமைகாலை10.30 மணிக்கு அதிபர் க.ஞானராசா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில்முதன்மைவிருந்தினராகதென்மராட்சிவலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-159)

# ‘குர்தீஷ்’ போராளிகளைத் தாக்கினால் கடும் விளைவைச் சந்திக்க நேரிடும்

## துருக்கிக்கு ட்ரம்ப் எச்சரிக்கை



**தெக்ரோன், ஜன. 16**

**துருக்கி - சிரிய எல்லையில் உள்ள ‘குர்தீஷ்’ போராளிகளைத் துருக்கி தாக்கினால் கடும் விளைவைச் சந்திக்க நேரிடும் என்று துருக்கிக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.**

சிரிய, துருக்கி, ஈராக் ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதியில் குர்தீஷ் இன மக்கள் வசித்து வருகின்றனர்.

தாம் வாழுகின்ற பகுதியை குர்திஷ்தான் என்ற தனிநாடாக அறிவிக்குமாறு அவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இதற்காக ஓர் ஆயுதக் குழுவும் அங்கு செயற்பட்டு வருகிறது. இந்த ஆயுதக் குழுவுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்து வருகிறது. ஆனால் குர்தீஷ் ஆயுதக் குழுவுக்கு எதிராக கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது துருக்கி. அண்மைக்காலமாக குர்தீஷ் அமைப்புக்கு எதிரான போரை துருக்கி மும்முரமாக முன்னெடுத்து வரும் நிலையில் துருக்கியை கடுமையாக எச்சரித்துள்ளது அமெரிக்கா.

“சிரியாவில் உள்ள ‘குர்தீஷ்’ போராளிகள் மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தினால், பொருளாதார ரீதியாக துருக்கி நாட்டுக்கு பேரழிவை ஏற்படுத்துவோம். குர்தீஷ் பகுதியில் 20 மைல் சுற்றளவுக்கு பாதுகாப்பு மண்டலம் உருவாக்கப்படும்" என்று ட்ரம்ப் குறிப்பிட்டார். (ம)



# அமெரிக்காவில் பனிப் புயல்

வோஷிங்டன், ஜன. 16

அமெரிக்காவில் கடும் பனிப்புயல் வீசிவருகிறது. இது அந்த நாட்டில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது அந்த நாட்டின் வடகிழக்குப் பகுதியில் ஆயிரத்து 609 கி.மீ. தூரம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கன்சாஸ், இன்டியானா பொலிஸ், வொஷிங்டன், டென்வர், மிசோரி, செயின்ட் லூயிஸ், அர்கன் சாஸ் உள்ளிட்ட பல பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அங்கு பனி, மழை போன்று கொட்டுகிறது. இதனால் அமெரிக்காவின் பாதி அளவு பகுதி வெள்ளை போர்வையால் போர்த்தியது போன்று காட்சி அளிக்கின்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம)

# கிம் ஜோங் - ட்ரம்ப் சந்திப்பு வியட்நாமில்

## அமெரிக்கா விருப்பம்


வோஷிங்டன், ஜன. 16

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பை வியட்நாமில் நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது அமெரிக்கா.

வடகொரியா பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறிய வகையில் தொடர்ந்தும், அணுவாயுதங்களைச் சோதித்து வந்தது. இதனால் அமெரிக்காவுக்கும் - வடகொரியாவுக்கும் இடையில் தீராப் பகை நிலவியது. இந்த நிலையில் எவரும் எதிர்பாரா விதமாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் சிங்கப்பூரில் கடந்த வருடம் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போது தன்னிடத்தில் உள்ள அணுவாயுதங்களை அழிப்பதற்கு



ஒப்புக்கொண்டது வடகொரியா. எனினும் வடகொரியா அணுவாயுதங்களை அழித்ததாக இல்லை. இதனால் வடகொரியாவுக்கு விதித்த பொருளாதாரத் தடைகளை அமெரிக்காவும் நீக்கவில்லை. இந்த விவகாரத்தில் இந்த இரண்டு நாடுகளும் மீண்டும் மோத ஆரம்பித்துள்ளன. இரண்டு நாடுகளையும் பேச்சில் ஈடுபடுத்துவதற்கு பல நாடுகளும் பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களும் முழுமூச்சாகச் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் வியட்நாமில் இந்தப் பேச்சை வைத்துக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளது அமெரிக்கா. (ம)



*அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் மைக் பாம்பியோ – சவூதியின் பட்டத்து இளவரசர் மொகமட் பின் சல்மான் இடையிலான சந்திப்பு சவூதியின் தலைநகர் ரியாத்தில் அண்மையில் இடம்பெற்றது. பத்திரிகையாளர் ஜமால் கொல்லப்பட்ட விவகாரத்தில் சவூதிக்கும் – அமெரிக்காவுக்கும்·இடையில் அண்மைக்காலமாக முறுகல்தன்மை நீடித்துவரும் நிலையில் இடம் பெற்றுள்ள இந்தச் சந்திப்பு முக்கியத்தும் மிக்கதாகப் பார்க்கப்படுகிறது. (ம)*

# போலந்தின் ஆளுநரொருவர் கத்தியால் குத்திக் கொலை

வர்சாவ், ஜன. 16




போலந்தின் டேன்சிக் நகர முதல்வர் பாவேவூ, அறக்கட்டளைக் கூட்டம் ஒன்றில் பங்கேற்றபோது மேடையிலேயே கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். அவருக்கு வயது 53.

ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்தக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையிலேயே அவர் கத்தியால் குத்தப்பட்டார். உடனடியாக உள்ளூர் மருத்துவமனை கொண்டு செல்லப்பட்ட அவருக்கு ஐந்து மணி நேரம் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால், அவரை மருத்துவர்களால் காப்பாற்ற முடியவில்லை. இந்தக் கொலையைச் செய்தார் என்று 27 வயதுள்ள, ஸ்டெபான் என்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம)

# உலகின் மிகப்பெரிய ஆகாயக் கப்பல் நேற்றுமுன்தினம் வெற்றிகர சோதனை

லண்டன், ஜன. 16




25 மில்லியன் யூரோ செலவில் சீரமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய ஆகாயக் கப்பல் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஐரோப்பிய வானூர்திப் பாதுகாப்பு முகமை ‘ஏர்லேண்டர்’ என்று பெயரிடப்பட்ட உலகின் மிகப்பெரிய ஆகாய கப்பலைத் தயாரித்துள்ளது. 92 மீற்றர் உயரமும், 44 மீற்றர் அகலமும் கொண்ட இந்த ஆகாயக் கப்பல், கடந்த 2017ஆம் ஆண்டு பரிசோதிக்கப்பட்டபோது விபத்தில் சிக்கியது. இதில் பெண்ணொருவர் படுகாயமடைந்தார்.

அதன் பின்னர் இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டதாக தெரிகிறது. இந்த நிலையில் தற்போது 25 மில்லியன் யூரோ செலவில் இந்த ஆகாய கப்பல் சீரமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏர்லேண்டர் ஆகாய கப்பல் நேற்றுமுன்தினம் பரிசோதித்து பார்க்கப்பட்டது. இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்தது. இதையடுத்து ஆகாய கப்பல் பயணிகளை ஏற்றிக்கொண்டு பறப்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருவதாக ஐரோப்பிய வானூர்திப் பாதுகாப்பு முகமை தெரிவித்துள்ளது.



இரா.நிசாந்தன்

# கண்ணன் மீது ஆண்டாள் கொண்ட காதல்

மனித வாழ்வியலில் காதல் எனும் அம்சமும் காலம் காலமாக இழையோடி வருகின்றது.

கல் தோன்றி மண் தோன்றி கடல் தோன்றும் முன்னாலே உண்டானது காதல் என்றனர் கவிஞர்கள். அதற்கமைய தமிழில் இலக்கியங்கள் தோன்றி காலம் முதல் இன்று வரைக்கும் காதல் பற்றியும், காதலர் பற்றியும் விரும்பியோ, விரும்பாமலோ பேசப்பட்டு வருகின்றது. காதல் எனும் போது மானிடக் காதல் என்பதுடன் தெய்வீகக் காதலும் அமை வுறுகின்றது. மானிடர் ஒருவர் இறைவன் மீது தீராத அன்பு செலுத்துவதை தெய்வீகக்காதல் எனலாம். அத்தகு தெய்வீகக் காதலின் உயிரோட்டம் ஆண்டாள் எனும் கோதையாவாள்.

**கண்ணன் மீது காதலுற்ற ஆண்டாள்**

ஆம், அத்தகு தெய்வீகக் காதலின் உயிரோட்டமான பாத்திரக்கூறு சூடிக் கொடுத்த சுடர் கொடி எனப்படும் ஆண்டாள் நாச்சியார். மாதேவியின் அவதாரமாக நிலவுலகில் தோன்றி பெரியாழ்வாரின் அரவணைப்பில் வளர்ந்து வந்தவள்.

சிறு வயதிலேயே தந்தையின் வாயிலாக கண்ணனின் பெருமைகள், அவனது அவதார மகிமைகளை கேண்மையுற்று அவன் மீது பக்தி கொண்டு, கண்ணனின் திரு நாமங்களைக் உச்சரித்து வாழ்ந்து வந்தவள் ஆண்டாள். காலப்போக்கில் அந்த அன்பானது காதலாக மாறியது. சிறு வயதிலேயே ஆண்டாள் கண்ணனைக் காதல் செய்யத் தொடங்கினாள். கண்ணனைத் தன் மனதில் இருந்தி அவன் இல்லையெனில் தான் இல்லை எனவாறு வாழத் தொடங்கினாள். அவன் நினைவாகவே வாழ்ந்து வந்தவள். தன் தந்தை கண்ணனுக்காக தொடுக்கும் மாலையினை தந்தைக்கு தெரியாமல் தினமும் அணிந்து அழகு பார்ப்பவள். இதன் காரணமாகவே சூடிக் கொடுத்த சுடர் கொடி எனும் நாமகரணம் கிடைக்கப் பெற்றவள். கண்ணனும் கோதையவள் அணிந்து அழகு பார்த்திடும் மாலையினையே விரும்பி ஏற்றிடவும் செய்திட்டான். இவ்வாறு கண்ணனைத் தவிர மானிடர் எவரையும் தான் மணம் புரிந்திடேன் என உறுதியாக நின்ற ஆண்டாளின் தூய்மையான பக்தியால் கட்டுண்ட கண்ணனும் திருவருள் கொண்டு கோதையவள் கரம் பற்றி அவளை தன்னுடன் இணைத்துக் கொண்டார். ஆம். அத்தகு ஆண்டாளின் காதலின் வெளிப்பாடு பற்றி இங்கு நோக்கிடுவோம்.

**மன்மதனிடம் ஆண்டாளின் கோரிக்கை**

கண்ணன் மீது காதல் வயப்பட்ட ஆண்டாளோ, தன்னிடம் கண்ணன் நிச்சயம் வருவான் எனக் காத்திருக்கின்றாள். ஆனால் கண்ணன் வருவதாக இல்லை. இந்த நிலையில் காதலின் அதிபதியான மன்மதனிடம் கண்ணனை தன்னிடம் சேர்ப்பிக்கும் படி விண்ணப்பம் செய்கின்றாள்.

*தை ஒரு திங்களும் தரை விளக்கித்*
*தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள்*
*ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து*
*அழகினுக்கு அலங்கரித்து அனங்க தேவா*
*உய்யவும் ஆம்கொலோ? என்று சொல்லி*
*உன்னையும் உம்பியையும் தொழுதேன்*
**வெய்யது ஓர் தழல் உமிழ் சக்கரக் கை**
**வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே**

அதாவது, தை மாதம் முழுவதும் தரையை தூய்மையாக்கி குளிர்ந்த நீர் தெளித்த அந்த மண் தரையில் நுண்ணிய மணல் கொண்:டு கோலமிட்டு தெருவை அலங்கரித்து காமதேவனே, உன்னை தொழுவதால் இந்த காதல் துன்பத்தில் இருந்து விடுபடலாம் என்று எண்ணி உன்னை மட்டுமன்றி உன் தம்பி சாமனையும் சேர்த்து வழிபட்டேன். அக்கினியை சொரிகின்ற சக்கரத்தை திருக்கரத்தில் ஏந்திய வேங்கடவன் கண்ணனுக்கு என்னை உரியவளாக்கி விடுவாயாக, என வேண்டினாள் ஆண்டாள். மேலும், மன்மதனிடம், அழகு நிறைந்த என் உடல் சங்கு சக்கரம் ஏந்திய உத்தமனாகிய கண்ணனுக்கு உரியது.

அவ்வாறு இல்லாது என் உடல் சாதராண மானிடர்க்கே எனின் அது வானத்தில் வசிக்கும் தேவர்கள் உள்ளிட்ட தெய்வங்களுக்கு வேதம் ஓதுகின்றவர்கள் வேள்வியில் இட்ட பொருள்களை காட்டில் வாழும் நரி உண்டதைப் போல அல்லது முகர்ந்து பார்ப்பதைப் போலாகும் அல்லவா? அவ்வாறு நடந்தால் நான் உயிர் வாழவும் மாட்டேன் மன்மதனே என மிக உருக்கமான விண்ணப்பம் வைக்கின்றாள் ஆண்டாள்.

**கண்ணன் வருவானெனில் கூடிடுக கூடலே**

மன்மதன் உதவிட வில்லை. ஆனாலும் ஆண்டாள் தன் நிலையிலிருந்து மாறவில்லை. ஆம். மனதில் நினைப்பது நடக்குமா? இல்லை நடக்காதா? என்பதை அறிந்திட குறி சொல்லும் பழக்கம் முன்னைய காலத்தில் இருந்துள்ளது. இதனை புக்கட்டி கூடுதல் என்றும் சொல்வர். அவ்வாறு ஆண்டாளும் தான் கண்ணனை அடைவேனா? என்பதை கூடல் கட்டி பார்க்கின்றாள்.

அதாவது காட்டில் உள்ள திருவேங்கட மலையிலும், நகரத்தில் உள்ள கண்ணபுரத்திலும் எத்தகு வருத்தமுமின்ற மகிழ்ந்து குடி கொண்டுள்ளவனும், வானமன அவதாரம் எடுத்தவனுமாகிய கண்ணன் ஓடி வந்து என் கை பற்றி தன்னோடு என்னை அணைத்துக் கொள்வான் எனில் நீ கூடிடு கூடலே என கூறுகின்றாள் நாச்சியார்

**கண்ணனிடம் குயிலை**
**தூது விடும் ஆண்டாள்**

கண்ணன் மீதான தன் காதலையும், தன் அனுபவிக்கும் காதல் துன்பத்தையும் எடுத்துக் கூறி கண்ணகை



விரைந்து தன்னிடம் வரும் படி உதவி செய்திடுவாய் என ஆண்டாள் குயிலிடம் உரைத்து அக் குயிலை கண்ணனிடம் தூது விடுக்கின் றாள். பாடல் இது தான்,

*என்புருகி இனவேல் நெடுங் கண்கள்*
*இமை பொருந்தா பல நாளும்*
*துன்பக் கடல் புக்கு வைகுந்தன்*
*என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்*
*அன்புடையாரை பிரிவுறு நோயது*
*நீயும் அறிதி குயிலே*
*பொன் புரை மேனிக் கருடக்*
*கொடியுடை புண்ணியனை வரக் கூவாய்*

அதாவது, என் உடலின் எலும்புகள் கண்ணனை நினைத்து உருகுகின்றன. வேல் போன்ற நீண்ட என் கண்கள் இமை மூடவில்லை. பல நாளகளாக துன்பம் எனும் பெருங்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கின்றேன். அந்தக் கடலில் இருந்து என்னை மீட்டெடுக்கும் தோணியாக விளங்குபவன் வைகுந்தன் எனும் கண்ணன். அத்தகு தோணியை பெற முடியாமல் தவிக்கின்றேன்.

அன்பு கொண்டவரை பிரிந்து வாழும் துன்பத்தினை பற்றி நீ அறிந்திருப்பாய் குயிலே, பொன்னை ஒத்த மேனி படைத்த கருடக் கொடியினை உடைய நாராயணனை என்னிடம் வரும்படி கூவுவாய். மேலும், குயிலிடம், அன்று இவ் உலகம் அளந்தவனை மனதில் இருந்தி விரும்பி னேன். அவனுக்கு அடிமையாய் இருக்கும் பொருட்டு அவனை நான் விரும்பினால் அவனோ என்னை வந்து சேராமல் எனக்கு வேதனையையே தந்தான்.

தென்றலும், நிலவும் என் உயிரின் ஊடே பிளந்து என்னை வதைப்பது எவ்விதத்தில் நியாயம் என்பதை நான் அறியேன்.

இந்தச் சோலையில் இருந்து இனிமையாக கூவி நீயும் என்னை வதைக்காதே குயிலே. இன்று நீ நாராயணன் என்னோடு வந்து சேரும் படி கூவாது விடின் இப்போதே உன்னை நான் இங்கிருந்து துரத்தி விடுவேன் என்கின்றாள் ஆண்டாள்.

**மேகத்திடம் தன் நிலை கூறி**
**தூது விடும் கோதை**

குயிலிடம் தன் நிலையினைக் கூறினாள் ஆண்டாள். ஆனால் அதற்கும் பயன்-கிடைக்கவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)





தன் காதல் துயரம் தாங்கிட முடியாமல் வானில் தவழ்ந்து செல்லும் மேகத்திடம் தன் நிலையினை எடுத்துரைத்து கண்ணனிடம் கூறும் படி உரைக்கின்றாள்.
குளிர் நீர் கொண்டு மேலே விளங்குகின்ற முகில்களே நிலத்தை கேட்டுப் பெற்றுக் கொண்டவன் இருக்கின்ற திருமலையில் பொழியும் கொண்டலேஇ நான் கொசுக்கள் உண்ட விளாம்பழம் போல் உடல் மெலியும் படி என்னுள்ளே புகுந்து என் நிறையை அழித்த நாராயணனுக்கு என் காதல் துன்பத்தைத் தெரிவியுங்கள்

*சலங்கொண்டு கிளர்ந்து எழுந்த தன்*
*முகில்காள் மாவலியை*
*நிலங் கொண்டான் வேங்கடத்தே*
*நிரந்து ஏறிப்பொழிவீர்காள*
*உலங்கு உண்டவிளங்கனி போல்*
*உள் மெலியப் புகுந்து என்னை*
*நலங் கொண்ட நாரணற்கு என்*
*நடலை நோய் செப்புமினே*

எனும் பாடல் அந் நிலையை தெளிவுறுத்துகிறது.

**கண்ணன் வாய்ச்சுவை பற்றி**
**சங்கிடம் வினவுதல்**

கண்ணனின் கையில் தவழும் வலம்புரி சங்கிடம் கண்ணன் வாய்ச் சுவை பற்றி வினவுகின்றாள் கோதையவள். அதாவது, பச்சைக் கருப்புரம் மணக்குமோ? ஆல்லது தாமரைப் பூ தான் மணம் வீசுமோ? குண்ணனின் பவளம் போன்ற சிவந்த வாய் இனிதுடன் இருக்குமோ? குவலாயபீடம் எனும் யானையின் தந்தத்தினை ஒடித்த மாதவனாகிய கண்ணனின் வாய்ச் சுவையும், அதன் மணமும் எப்படி இருக்கும் என உன்னிடம் வேண்டிக் கேட்கின்றேன். அதை விரும்பிக் கூறுவாய் வெண்சங்கே எனப் பாடுகின்றாள்.

*கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ*
*திருப்பவளச் செவ்வாய்தான்*
*தித்தித்து இருக்குமோ*
*மருப்பு ஒசித்த மாதவன்தன்*
*வாய்ச்சுவையும் நாற்றமும்*
*விருப்புற்றுக் கேட்கின்றேன்*
*சொல் ஆழி வெண்சங்கே*
என பாடல் வழி காப்பியம் செய்கின்றாள்.

**கண்ணன் இருக்குமிடம்**
**கொண்டு செல்க என வேண்டுதல்**

கண்ணன் மீது தான் கொண்ட காதலையும், கண்ணன் தன்னை பிரிந்திருப்பதால் தான் அடையும் துன்பத்தையும் குயில், மேகம் என்பவற்றிடம் தூதாக உரைத்தும் பயன் கிடைக்காமையால் ஆண்டாளின் காதல் நோய் அதிகரித்தது.
அந்த நோய் நீங்க வேண்டுமெனில் தன்னை இப்போது கண்ணன் வசிக்குமிடம் கொண்டு போய் சேருங்கள் என தன் சுற்றத்தவரி டம் உரைக்கின்றாள் கோதை நாச்சியார்.
தாய்மார்களே என் நோய் எப்படிப்பட்டது என்பதை எத்தகு அறிவானவர்களுக்கும் அறிந்திட முடியாது. காளிங்க மடுவின் கரையிலிருந்த கடம்ப மரத்தின் மேல் ஏறி காளிங்கன் மீது நடனமாடிய கரையிலே என்னை கொண்டு போய் சேருங்கள். நீலக் கடல் போன்ற நிறம் படைத்தவனாகிய கண்ணன் தன் திருக்கரங்களால் என் கரங்களை பற்றினால் என் நோய் தீர்த்து விடும் என்கிறாள் அவள்.

இது மட்டுமன்றி மேலும் உரைக்கின்றாள் ஆண்டாள். தாய்மாரே, இனி வெட்கபட்டு ஒரு பயனுமில்லை. ஊரில் அனைவரும் என் நிலையை அறிந்து கொண்டனர். காலதாமதமின்றி வேண்டியவற்றை செய்து பிரிவினால் ஏற்பட்ட துன்பத்திற்கு மருந்து பெற்றால் இந் நோயானது குறைந்து போகும். அதற்குரிய வழி, என்னை இக்கணமே ஆயர்பாடிக்கே கொண்டு சேர்த்து விடுங்கள் என இரஞ்சுகின்றாள் ஆண்டாள். ஆம். கண்ணன் மீது உற்ற ஆண்டாளின் காதல் தான் எவ்வளவு ஆழமானது.

**கண்ணன் கனவில் வந்து**
**கைத்தலம் பற்றுதல்**

தன் நிலையினை குயிலின் வாயிலாக தூது விடுத்தாள் ஆண்டாள். ஆனால் அதற்கு பலன் கிடைத்ததாக தெரியவில்லை. நேரில் தான் கண்ணனைக் காண முடியவில்லை. ஆனால் கனவிலே காதலனைக் காண்பதற்கும், அவனோடு கூடியிருப்பதற்கும் தடையெதுவும் இல்லையே. ஆம். ஆண்டாளும் கண்ணனோடு தனக்கு திருமணம் நடந்ததாக கனவு காண்கின்றாள். கண்ணன் தன் கைத்தலம் பற்றியதாக தன் தோழியருக்கு உரைக்கின்றாள். பாடல் இது தான்,

*மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத*
*முத்துடை தாம நிரை தாழ்ந்த பந்தற் கீழ்*
*மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னை*
*கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்தோழி நான்*
*அதாவது, மத்தளம் முதலிய வாத்தியங்கள் முழங்க, வரிகளை*
*உடைய சங்குகள் மிகுதியாக ஒலித்திட*

முத்துக்களை உடைய மாலைகளை வரிசையாக தொங்கவிடப்பட்ட அந்த மணப்பந்தலின் கீழ் என் மைத்துனன் முறையானவனும், மதுசூதன் எனப்படுபவனுமாகிய கண்ணன் வந்து என்னுடைய கைகளைப் பற்றி என்னை மணம் செய்து கொண்டதாக கனாக் கண்டேனடி தோழி என்கின்றாள் ஆண்டாள். ஆம். அழகியதொரு திருமணக் காட்சியை பதிவு செய்திருக்கின்றாள் அல்லவா ஆண்டாள் நாச்சியார்.
ஆண்டாளைப் போல உண்மை அன்பு கொண்டு காதல் செய்திடுவீர்.
ஆம். இவ்வாறு தன் மனதில் கண்ணனை இருத்தி அவன் மீது காதலுற்று அவன் கைத்தலம் பற்றிய ஆண்டாள் நாச்சியாரின் காதல் தான் எத்துணை ஆழமானது. தூய்மையான அன்பினால் இறைவனையே கட்டிப் போட்ட ஆற்றல் படைத்தவள் அல்லவா? இந்த ஆண்டாள். ஆக நாமும் பாரதி உரைத்ததைப் போன்று உண்மையான அன்பு கொண்டு ஆதலால் காதல் செய்திடுவோம். ■

> தன் நிலையினை குயிலின் வாயிலாக தூது விடுத்தாள் ஆண்டாள். ஆனால் அதற்கு பயன் கிடைத்ததாக தெரியவில்லை. நேரில் தான் கண்ணனைக் காண முடியவில்லை. ஆனால் கனவிலே காதலனைக் காண்பதற்கும், அவனோடு கூடியிருப்பதற்கும் தடையெதுவும் இல்லையே. ஆம், ஆண்டாளும் கண்ணனோடு தனக்கு திருமணம் நடந்ததாக கனவு காண்கின்றாள்.



## இறுவெட்டு வெளியீடும் கலைஞர்கள் மதிப்புறுத்தலும்


யாழ்ப்பாணம் கலாலய நாடக மன்றத்தால் நடத்தப்படும் லங்காதானம், அபிமன்யு, இதிகாசஇசை ஆகிய நாடகங்களுக்கான இசை வெளியீடும் கலைஞர்கள் மதிப்பளித்தலும் தொல்புரம் கலாலய மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலாலயத் தலைவர் செ.உதயச்சந்திரனின் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி சுஜிபா சிவதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ம-63)




## மார்கழி இசைவிழா

வவுனியா, ஜன. 16
கலாபூசணம் திருமதி தேவிமனோகரி நாகேஸ்பரனின் நினைவாக வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையும், கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து நடத்திய 'மார்கழி இசைவிழா' நிகழ்வு கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.
உதவிப் பிரதேச செயலர் ச.பிரியதர்சினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா, தெற்கு வலயகல்வி பணிப்பாளர் முத்துராதாகிருஸ்ணன், விரிவுரையாளர் அருந்ததி ரவீந்திரன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் கந்தையா கனகேஸ்வரி, பண்டிதர் வீ.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-110)

# வழிகாட்டுவோம்...



# தைப்பொங்கல்

மீனா வீட்டில் தைப்பொங்கல் முடித்து சூரியனுக்கு படையலிட்டு அனைவரும் வணங்கி நின்றனர். வருவாய் வருவாய் சூரியனே வானவிளக்கேவணங்குகிறோம். இருளைப் போக்கி ஒளி தருவாய் இறைவன் அருளே வணங்குகி றோம் என்று பாடிக் கொண்டிருந் தார் தாத்தா. ஆனால் மீனாவின் மனம் முழுவதும் சியானியின் நினைப்புத்தான். அவர்கள் வீட்டி லும் பொங்கினார்களா என்று அறி யும் ஆவல் அவளுள் இளையோடி யது.

சியானியும் மீனாவும் உயிர் நண் பிகள். ஒன்றாகவே பாடசாலை சென்று வருபவர்கள். திங்கட் கிழமை வகுப்பு பாடவேளையில் நாளைவீட்டில்பொங்கல்செய்பவர் கள்கையைஉயர்த்துங்கள்என்று வகுப்பாசிரியர் கேட்டபோது சியா னியைத் தவிர அனைவரும் கை களை உயர்த்தினார். அவளைப் பார்த்ததும் மீனாவுக்கு மிகவும் பரி தாபம் ஏற்பட்டது.

சியானியின் தந்தை போரில் உயி ரிழந்துவிட்டார். அவளையும்சகோ தரனையும்தாயார்தான்வேலைக் குச் சென்று வளர்த்து வருகிறார். இந்த நிலையில் அவர்களால் எப்ப டிப் பொங்கல் செய்ய முடியும்.

அவர்கள்வீட்டிலும்பொங்கல்செய்ய வேண்டும் என்று நினைத்த மீனா ஒரு காரியம் செய்தாள். தான் சிறு கச் சிறுக சேமித்து வைத்திருந்த பணத்தின் மூலம் பொங்கலுக்குத் தேவையானஅனைத்துப்பொருள் களையும் வாங்கியதுடன் மிகுதிப் பணத்தை ஒரு பையில் இட்டு கட்டி னாள். இவற்றுடன் உங்கள் வீட்ட லும்பொங்கல்பொங்கட்டும்மனை தன்னில் மங்கலம் தங்கட்டும். இனிய வாழ்த்துக்கள். அன்புடன் தேவதைஎன்றுஎழுதப்பட்டகடிதத் தையும் எடுத்துச் சென்று எவருக் கும் தெரியால் சியானி வாசலில் வைத்துவிட்டுவந்துதன்செயலை பெற்றோரிடம் கூறினான். தம் மகளை கட்டியணைத்து உச்சி மோர்ந்தனர் பெற்றோர்.


தீபத்தைகண்ணில்ஒற்றிவணங்கு மீனம்மா என்ற தாத்தாவின் குரல் கேட்டுநிஜவுலகம்மீண்டாள்மீனா. பூசை வழிபாடு முடித்து திருநீறு நெற்றியில் தரித்து அனைவரும் பகிர்ந்தளித்தனர். சியானிக்குப் பொங்கல் எடுத்துச் செல்ல ஆயத்த மானாள் மீனா. அந்தச் சமயம் அகத்திலும் முகத்திலும் மகிழ்ச்சி பொங்கஅவர்கள்வீட்டுக்குப்பொங் கல் கொண்டு வந்தாள் சியானி. அவளை ஆரத் தழுவி வாழ்த்து ரைத்தாள்மீனா. பிறர்மகிழ்ச்சியில் தன் மகிழ்ச்சியைக் காணும் மீனாவை எண்ணி வியந்து நின்ற னர் பெற்றோர்கள்.

# பொங்கலோ பொங்கல்

வெள்ளையெல்லாம் அடித்து வைத்து
வீட்டை நன்கு மெழுகி வைத்து
விடியும் போதே குளித்து விட்டு
விளக்கு ஒன்றை ஏற்றி வைத்து

கோலமிட்ட பானை தன்னில்
கொத்து மஞ்சள் கட்டி வைத்து
அந்தப் பானை தன்னைத் தூக்கி
அடுப்பில் வைத்துப் பாலை ஊற்றி
பொங்கிப் பாலும் வருகையிலே
பொங்கலோ பால் பொங்கல் பால்
பொங்கல் என்போம்

தேங்காயோடு கரும்பும் சோறும்
தெய்வத்துக்குப் படைத்து வைத்து
ஒன்று சேர்ந்து உண்டிடுவோம்
ஓடி ஆடிப் பாடிடுவோம்



# உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவோம்


இவ்வுலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீரில் வாழ்வன என பல்வேறு உயிரி னங்கள் உள்ளன.

* நாம் எமது உயிரைப்போல பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்.
* அவற்றுக்கு தீங்கு செய்யக் கூடாது.
* அவைபடும் துன்பம்களைக் கண்டதும் இரக்கப்படுதல் வேண்டும்.
* அவற்றுள் பல எமக்கு பல நன்மைகளையும் செய்கின்றன.
* பசு சுவையான பாலைத்தருகிறது.
* நாய் நன்றியுடன் வீட்டைக் காக்கிறது.
* கோழி, கிளி, மைனா போன்ற பறவைகளை நாம் வளர்க்கிறோம்.
* அவை எம்மோடு அச்சமின்றி நெருங்கி வாழ்கின்றன.
* அவற்றுக்கு தொல்லை கொடுத்தல் ஆகாது
* உயிர்கள் எவையாயினும் அவைகளிடத்து அன்பு செலுத்தவேண்டும்.
* புத்தர் அம்பு தைத்து துன்புற்ற பறவைகளைக் காப்பாற்றினார்.
* ஒரு பறவையைக் காப்பாற்ற தன் தசையையே அரிந்து கொடுத்தார் சிபிச் சக்கரவத்தி.
* புத்தர்போல் சிவிச் சக்கரவர்த்தி போல நாமும் உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும்.
* எவ்வுயிரும் நம் உயிர்போல எண்ணிட வேண்டும்.
* அவையெல்லாம் இன்பமுற உதவவேண்டும்.
* உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதையே ஜீவகாருணியம் என்கிறோம்.

# உங்களுக்கு தெரியுமா?

- எமது குருதி ஒரு நாளில் சுமார் 30 கோடி கிலோமீற்றர் பயணிக்கிறது
- எமது நாக்கில் 3 ஆயிரம் சுவை அறியும் செல்கள் உள்ளன
- கைரேகையைப் போன்றே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்
- நம் உடலில் சதையின் அழுத்தம் அதி கம் உள்ள பகுதி நாக்கு.





# ஒரு கடிதம் எழுதுவோம்

01. கடிதம் எழுதத் தொடங்கும் முன்பு கடிதத்தாளின் வலது பக்க மேல் மூலையில் எமது முகவரி ( வீட்டிலக்கம், வீதிப் பெயர் , ஊர்பெயர்) எழுதும் அன்றைய திகதி என்பன எழுதப்படல் வேண்டும் வீதிப் பெயர் ஊர்ப் பெயர், எழுதும்போது காற்புள்ளிவரும் (,) திகதி எழுதி பின்பு நிறுத்தல் குறியும் (.) இட வேண்டும்.
02. பின்னர் கடிதத்தாளில் முகவரியின் திகதி எழுதப்பட்டதற்கு சற்று கீழே இடது பக்கத்தில் எவருக்குக் கடிதம் எழுதுகிறோமோ அவரை விழித்து அதாவது அன்புள்ள நண்பன்/ மாமா/சகோதரி என எழுதி அதன் பக்கத்தில் காற்புள்ளி இட வேண்டும்.
03. இதைத் தொடர்ந்து நலம் கூறி நலம் வினவும் பகுதி அமையும்.



# பட்டங்கள்

✦ பட்டங்களைக் கண்டுபிடித்தவர்கள் சீனர்கள். கி.மு. 5ஆம் நூற் றாண்டில் இரு அறிஞர்கள் பட்டத்தைக் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆரம்பத்தில் பட்டுத்துணியில் மூங்கில் குச்சிகளை இணைத்துப் பட்டங்கள் செய்யப்பட்டன. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் காகிதப் பட்டங்கள் உருவாகின.

✦ சீனர்கள் பட்டங்களை வைத்து தூரத்தை அளந்தனர். காற்றின் இயல்பை அறிந்தனர். தகவல்களைத் தெரிவித்தனர். ஆரம்பக் காலச் சீனப் பட்டங்கள் செவ்வக வடிவில் இருந்தன. பட்டத்தில் வளைந்த குச்சியைப் பயன்படுத்த ஆரம்பித்த பின்னர் வால் இல்லா பட்டங்கள் உருவாயின. நவீன காலத்தில் புராண உரு வங்கள், தலைவர்களின் உருவங்களில் எல்லாம் பட்டங்கள் செய்யப்படுகின்றன. சில பட்டங்களில் விசில் சத்தமும் இசை யும் வெளிப்படுகின்றன.

✦ சீனாவிலிருந்து பட்டங்கள் கம்போடியா, தாய்லாந்து, இந் தியா, ஜப்பான், கொரியாவுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் பரவியது. இந்தியாவில் பட்டம் அறிமுகமான பின்னர், ஜனவரி மாதம் நடைபெறும் அறுவடைத் திருவிழா வில் பட்டங்கள் விடும் விழா கொண்டாடப் பட்டு வருகிறது.

✦ பட்டம் வானூர்தி கண்டுபிடிப்புக்குக் காரண மாக இருந்திருக்கிறது. விஞ்ஞானி பெஞ் சமின் பிராங்ளின் மின்னலையும் இடியை யும் ஆராய்வதற்குப் பட்டங்களைப் பயன்படுத்தியிருக்கிறார். அலெக்சாண்டர் கிரஹாம் பெல், ரைட் சகோதரர்கள் போன்ற வர்களும் பட்டங்களை வைத்துப் பரிசோதனைகளை மேற் கொண்டுள்ளனர்.

✦ சில நாடுகளில் பட்டங்கள் பறக்கவிடும் போட்டிகளை நடத்துகி றார்கள். அகமதாபாத்திலும் ஜப்பான் தலைநகர் டோக்கியோ விலும் பட்டங்களுக்கான அருங்காட்சியகம் உள்ளது.

✦ வேலையை விட பட்டம் விடுதலில் மக்கள் ஆர்வம் செலுத்திய தால் ஜப்பானில் சில காலம் பட்டம் தடை செய்யப்பட்டது. பட்டம் கண்டுபிடிக்கப்பட்ட சீனாவிலும் 3 ஆண்டுகள் பட்டம் தடை செய்யப்பட்டிருந்தது. தாய்லாந்தில் பட்டம் விடுவதற்கு 78 விதி முறைகள் இருக்கின்றன.

✦ நியூசிலாந்தைச் சேர்ந்த பீட்டர் லின், 10ஆயிரத்து 400 சதுர அடி கொண்ட மிகப் பெரிய பட்டத்தை உருவாக்கி, கின்னஸ் சாதனையில் இடம்பிடித்தார்.

✦ உலகின் பெரும்பாலான நாடுகளில் பட்டம் விடுதல் முக்கியமான விளையாட்டாக மாறிவருகிறது. அமெரிக்காவில் ஒவ்வோர் ஆண்டும் 5 கோடி பட்டங்கள் விற்பனையாகின்றன.

# பசுவைப் போற்றும் பட்டிப் பொங்கல்



"பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், சலம் என்னும் ஐந்தும் பஞ்ச கௌயமாகும், இவை அபிடகத்துக்குரிய புனிதமான திரவியங்கள். பசு காத்தல் பெரிய அறம், பசு இனத்தில் நத்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன தெய்வாம்சமானவை."

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

### பசுமை காத்த சிவபூமி

"கோமாதா எங்கள் குலமாதா" பசுகாத்தலின் பெருமையையும் காவாதொழிதலின் தீமையையும் பற்ற வேதாமங்களும் மற்றும் நூல்களும் ஒன்று போலவே தோத்தரிக்கின்றன. அவற்றைப் பின்பற்றி ஒழுகி திகழ்ந்து வந்தது நமது புண்ணியபூமி. ஆனால் இந்தக் காலத்தில் அவ்வொழுக்கம் மாறிவிட்டது. பசுக்களைக் காப்பதும் காவாதொழிவதும் நிற்க. அவற்றை உண்டிப் பொருளாக வதை செய்யாதிருத்தலே போதும். அதுவே பெரும் புண்ணியமாகும் என்று சொல்லும் காலம் இப்போது உள்ளது.

### பஞ்ச கௌவியம் தருவது பசு

பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், சலம் என்னும் ஐந்தும் பஞ்ச கௌயமாகும். இவை அபிடகத்துக்குரிய புனிதமான திரவியங்கள். பசு காத்தல் பெரிய அறம், பசு இனத்தில் நத்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன தெய்வாம்சமானவை. பசுவைத் தானமாக் கொடுத்தல் கோதானம் எனப் பெருமை பெற்றது.

### பசுவின் பெருமை

சைவ சித்தாந்தம் ஆன்மாக்களைப் பசு எனக் கூறுகிறது. பசுக்களுக்கு தலைவர் என்ற முறையில் சிவபெருமான் பசுபதி எனத் திருநாதம் பெற்றவர். சைவ சமயத்தின் முதல் நூலான வேதத்துக்கும் பசு என்னும் பெயரும் உண்டு.

பசுவை மாடு என்னும், ஆ என்றும், கோ என்றும், தேனு என்றும் தமிழர்கள் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப் பெயர்களிட்டு அழைத்து மகிழ்வர். கறுப்பி, சிவப்பி, வெள்ளைச்சி, மறைச்சி, நரைச்சி என்பனவெல்லாம் சாதாரணமாக வழங்கும் பெயர்கள்.

பசு இல்லா வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்டசம், கீர்த்தி இல்லையாம் என்றும், பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து இருக்கமாட்டாள் என்னும் பசு இல்லாத நாடு காட்டுக்குச் சமமாகும் என்றும் பெருமையாக எண்ணுவர்.

*"ஆவிலா மனையகம் அழகு குன்றுமே*
*ஆவிலா மனையகம் ஆக்கம் இல்லையாம்*
*ஆவிலா மனையகம் அமலை நீக்குவாள்*
*ஆவிலா நாடெல்லாம் அடவி யாகுமோ"*

என ஈழத்துச் சிதம்பர புராணமுடையார் நவாலியூர் கோ. இளமுருகனார் அழகாகக் கூறியுள்ளார்.

### பசுவின் உடலில் தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும்

பசுவின் கொம்பின் அடியில் பிரத விட்டுணுக்களும், கொம்பின் நுனியில் கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசங்களும், சிரத்தில் சிவனும், நடு நெற்றியில் உமாதேவியும், மேல் நாசியில் முருகக் கடவுளரும், உள் நாசியில் நாகோரும், இரு காதுகளிலும் சூரிய சந்திரரும், பல்லில் வாயுவும், நாவில் வருணனும், ஊங்கரத்தில் சரஸ்வதியும், இருதயத்தில் இயமனும், கெண்டைத் தலத்தில் இயக்கர்களும், உதட்டில் உதய அஸ்தமன சக்திகளும் கழுத்தில் இந்திரனும், திமிலில் அருக்கர்களும், மார்பில் சாத்தியரும், நான்கு கால்களிலும் அனில வாயுக்களும், முழந்தாள்களில் மருத்துவரும், குரத்தின் நுனியில் நாகலோகத்தாரும், முதுகில் உருத்திரரும், சந்திகளில் வசுக்களும், அரைப் பலகையில் பிதிர்களும், பாதத்தில் சத்த மாதர்களும், அபானத்தில் இலக்குமியும், அடிவாலில் நாகோரும், வால்மயிரில் சூரியனின் ஒளியும், சிறுநீரில் கங்கையும், சாணத்தில் யமுனையும், உரோமத்தில் முனிவர்களும், உதரத்தில் பூமாதேவியும், முலையில் சமுத்திரமும், வயிறு, இருதயம், முகம் என்பவற்றில் காருகபத்தியம் முதலிய அக்கினி மூன்றும், எலும்பிலும் சுக்லத்திலும் யாகங்கள் எல்லா அவயவங்களிலும் கற்புடை மகளிர் முதலானவைகளும் பரந்து காணப்படுகின்றன என்று சிவதரு மோத்திரம் எடுத்துரைக்கின்றது.

### கோதனம்

இறக்கப் போகின்றவர் இறுதிச் சமயத்தில் தாம் செய்த பாவங்கள் நீங்கிச் சுககதிப் பேறு பெற வேண்டிக் கோதானம் முதலியவற்றை அந்தணரை வரித்துச் செய்க அல்லது இறக்கப் போகின்றவரைக் குறித்து அவர் புத்திரர் முதலாயினோரும் செய்யலாமென நூல்கள் கூறுகின்றன.

### மகத்துவ சிறப்புக்களுக்குரிய கோமாதா

தாய் தன் பிள்ளைக்குக் குழந்தைப் பருவத்தில் மட்டும் பாலூட்டி வளர்ப்பாள். நம் அனைவரும் குழந்தைப் பருவம் முதல் விருத்தப் பருவம் வரை பால் தந்து காப்பது பசு.

நம் உயிர் பிரியும் வேளையில்கூட இறுதியாக உற்றார் உறவினர் எம் வாயில் விட பால் தருவது பசு.

நாம் கழித்தவிடும் புல், தவிடு, கஞ்சி, கழுநீர், வைக்கோல், புண்ணாக்கு, இலை, குழை முதலானவற்றை உண்டு அதிசயிக்கத்தக்க வகையில் பூரண சத்துள்ள பாலைத் தருவது பசு.

தனது கழிவுப் பொருள்களான சாணியையும், சிறுநீரையும் பயிர் வளர்க்கும் உயர்ந்த இயற்கை உரமாகவும் கிருமி நாசினியாகவும் தருவது பசு.

சைவ சமயக் கிரியைகள் அனைத்தின் ஆரம்பத்திலும் செய்யப்படும் புண்ணிய ஆவாகனத்துக்குரிய பாலைத் தருவது பசு. திருமணத்தின்போது மாங்கல்யதாரணம் முடிந்தவுடன் எல்லாத் தேவர்களின் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காகத் தரிசனமாவது பசு. மணமக்கள் நாள் முகூர்த்தத்தில் அருந்துவதற்குரிய பால் பழத்துக்கான பாலைத் தருவது பசு.

இந்த வண்ணம் நம் வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளிலும் உடனிருந்து எம் வாழ்வைப் புண்ணிய நெறிப்படுத்த வல்ல பசுவைப் போற்றி வளர்ப்பது நம் தலையாய கடமையாகும். பசுவுக்கு உணவு கொடுத்தல் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய இன்றியமையாக் கடமை என்பது "யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை" எனும் திருமூலர் திருமந்திரத்தால் உணரப்படும் பசு ஓம்புதல் இம்மை மறுமையாகிய இருமைப் பயனையும் தரவல்லது.

### சிவகதிபெற்றோர்

திருமூலர் சண்டேஸ்வரர், ஆனாய நாயனார், மனுநீதிகண்ட சோழன், ஞானப் பிரகாச முனிவர் பசு ஓம்புதல் மூலம் சிவகதி பெற்றவர்கள்.

### திருமுறைகளில் பசுவுக்குப் பெருமை

சைவ சமயத்தின் கருவூலமான தேவாரத் திருமுறைகளில் பசுவின் பயன்பற்றி மூவர் முதலிகள் பாடிய பதிகங்கள் "கோதனத் திருமுறை" எனப் போற்றப்படுகின்றன. இந்த விதமாக எங்கள் வாழ்வில் பசுமைப் புரட்சிக்காண வழியில் உதவியாக நிலவிவரும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைப்பொங்கல் இடுபவராகிய நாம் அடுத்தநாள் மாட்டுப் பொங்கல் புரிந்து வெண்மைப் புரட்சிக்கு வழியாகவுள்ள பசுவையும் மாட்டையும் போற்றுகின்றோம்.



.@Sureshk_ofcl

காலங்கள்
காத்திருக்கின்றன எம்மை
கடப்பதற்காக...

சிலந்தி™@nandhu_twitts

விரல் விட்டு எண்ண முடியாத
அளவில் சொந்தங்கள்
இருப்பின்..
விரல் விட்டு எண்ணும் அளவே
அன்பும், பாசமும் இருக்கும்..!!






# நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படத்தில் கீர்த்தி சுரேஷ்

கீர்த்தி சுரேஷ் நடிப்பில் கடந்த வருடம் 'தானா சேர்ந்த கூட்டம், நடிகையர் திலகம், சீமராஜா, சாமி 2, சண்டக்கோழி 2, சர்கார்' ஆகிய படங்கள் வெளியாகின. இந்தப் படங்கள் அனைத்துக்கும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்புக் கிடைத்தது. குறிப்பாக சாவித்ரியின் வாழ்க்கை வரலாறு படமான 'நடிகையர் திலகம்' பெரு வெற்றி பெற்றது.

தற்போது நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படத்தில் நடிக்க கீர்த்தி சுரேஷ் ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். இந்தப் படம் தெலுங்கில் உருவாகவுள்ளது. பெப்ரவரி மாதம் இதன் படப்பிடிப்பை தொடங்க இருக்கிறார்கள்.

தற்போது இந்தப் படத்தை 'கீர்த்தி 20' என்று அழைத்து வருகிறார்கள். விரைவில் இந்தப் படத்தின் முதல் சுவரொட்டி மற்றும் தலைப்பை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க இருக்கிறார்கள்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பெற்றோர் ஆலோசனையை ஏற்பது அவசியம். திட்டமிட்ட பணிகளை கூடுதல் அக்கறையுடன் நிறை வேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் சீரான இலாபம் கிடைக்கும்.

**இடபம்:** சிலரது பேச்சு சங்கடப்படுத்தலாம். யாருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** பொது இடங்களில் கவனமுடன் பேசவும். தொழில், வியாபார நடைமுறையில் குறுக்கீடு வந்து சரியாகும். சேமிப்பு பணம் முக்கிய செலவுக்குப் பயன்படும்.

**கடகம்:** பலர் வியக்கும் வகையில் முன்னேறுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமான அளவில் இருக்கும். மேலதிக பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** எதிலும் விழிப்புணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று தாராள பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** உற்சாகமுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமும் கலையுணர்வும் அதிகரிக்கும். அனைவரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி திருப்திகரமாக நிறைவேறும்.

**தனுசு:** தேவையற்ற கருத்துக்களை பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வதில் தாமதம் இருக்கும். புதிய வழிகளில் செலவு அதிகரிக்கலாம்.

**மகரம்:** குடும்ப உறுப்பினர் அதிக பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் செழிக்க தக்க நடைமுறையை பின்பற்றவும்.

**கும்பம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். தாய்வழி உறவினரால் பண உதவி கிடைக்கும்.

**மீனம்:** உற்சாகம் நிறைந்த மனதுடன் செயல்படுவீர்கள். வெகுநாள் திட்டமிட்ட நற்செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள்.

# 'குப்பை' நகரம்!

தெருவில் கிடக்கின்ற குப்பைகளில் பாதி பிளாஸ்டிக் குப்பைகள்தான். பிளாஸ்டிக் கைத் தடுக்க முடியாது. ஆனால், தவிர்க்க முடியும்.

நாட்டின் வீதிகள் குப்பையாகக் காட்சியளிக்கக் காரணம், குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடாமல், குப்பைத் தொட்டிக்கு வெளியே வீசி எறிவதுதான். அதனால், இனி தெருவையே குப்பைத் தொட்டி என்று சொல்ல ஆரம்பிக்கலாம். இப்ப குப்பை, குப்பைத் தொட்டிக்குள் கிடக்கிற மாதிரிதானே அர்த்தமாகும்!

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 5 |
| | 5 | | 4 | | 6 | | 7 | |
| | | 6 | 9 | | 2 | 3 | | |
| | 4 | 7 | 1 | 2 | 9 | 5 | 3 | |
| | | | 5 | | 3 | | | |
| | | | 6 | | 7 | | | |
| | 8 | 3 | | | | 2 | 5 | |
| | 7 | | 2 | | 5 | | 8 | |
| | | 9 | | | | 1 | | |

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 7 | 3 | 1 | 6 | 4 | 8 | 5 |
| 5 | 1 | 6 | 8 | 4 | 7 | 2 | 3 | 9 |
| 3 | 4 | 8 | 2 | 9 | 5 | 7 | 1 | 6 |
| 7 | 5 | 3 | 6 | 2 | 1 | 9 | 4 | 8 |
| 1 | 8 | 2 | 4 | 7 | 9 | 6 | 5 | 3 |
| 9 | 6 | 4 | 5 | 3 | 8 | 1 | 2 | 7 |
| 8 | 3 | 9 | 1 | 6 | 4 | 5 | 7 | 2 |
| 6 | 2 | 1 | 7 | 5 | 3 | 8 | 9 | 4 |
| 4 | 7 | 5 | 9 | 8 | 2 | 3 | 6 | 1 |




கோபத்தை
தேவைப்படும்
போது கேடயமாகப்
பயன்படுத்தலாமே
தவிர ஒருபோதும்
ஆயுதமாகப்
பயன்படுத்தக்
கூடாது.








குனிவதால் எழுத்துக்கள் நிமிரும். பனிவதால் வாழ்க்கையும் உயரும்.



# முதலாம் ஆண்டு நினைவுகள்

உதிப்பு
04
•
05
•
1953




உதிர்வு
26
•
01
•
2018

திதி:- 16.01.2019 (தசமி)

## V.M.கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(உரிமையாளர் V.M.K. ஜூவல்லறி, நிறுவுனர் V.M.K.கல்லுடைக்கும் ஆலை)

எம் குலத்தின் குல விளக்கே!
எங்கள் சுமை தாங்கியே! பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புடன் எம்மை வழிநடத்தி
எமக்காக வாழ்ந்த அன்புத் தெய்வமே!
ரோஜாவின் இதழ்களைப் போல் தீராத வாசமாய்
ராஜாக்கள் மாளிகையில் காணாத இன்பமாய் நேசமாய்
ஒன்றுபட்ட இதயத்திலே ஒருநாளும் பிரிவுகள் இல்லையென நினைத்தோம்
எம் உயிர் உள்ள ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுடன் வாழ்வோம்
புன்னகை தவழும் உங்கள் குரலெங்கே? கம்பீர தோற்றம் எங்கே?
எம் கண்ணீரில் கலந்தீரோ! கரையில்லா காவியமே!
பண்பாலும் நேசம் நிறைந்த பேச்சாலும்
வந்தவரை விருந்தோம்பும் உயரிய பண்புடனும்
பணியாளர்களின் பண்பாளன், வாடிக்கையாளர்களின் நண்பன்
தர்மத்துக்கு தர்மர், வறுமையில் வாடுவோருக்கு வள்ளல்
அஞ்சா நெஞ்சன்
ஆண்டவன் சந்நிதியில் ஒரு மெய்யடியார்
இன்று பற்றிப் பேசு நாளை பற்றிப் பேசாதே இது தான்
அவர் வாழ்க்கையின் லட்சியமாக வாழ்ந்த
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



கண்டி வீதி,
சாவகச்சேரி.

V.M.K
குடும்பத்தினர்.

(IN/9085)(11,17)

# படையினர் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்வுகள்

முல்லைத்தீவு, ஜன.16
முல்லைத்தீவு மாவட்ட படையினரின் ஏற்பாட்டில்ஒட்டுசுட்டான்தான்தோன்றீஸ்வரர்ஆலயத்தில் தைப்பொங்கல் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.



முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள 59, 64, 68ஆவது படைப்பிரிவுகளின் ஏற்பாட்டில்பொங்கல்வழிபாடுகள்மேற்கொள்ளப்பட்டு பொது மக்களுக்கு சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் 59 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் றுவான் வணிகசூரிய, 64 ஆவதுபடைப்பிரிவின்தளபதிபிரிகேடியர்ஜெனநாத்ஜெயவீர, 68ஆவதுபடைப்பிரிவின்தளபதி பிரிகேடியர் அருண ஆரிய சிங்கம் ஆகியோர் முதன்மைவிருந்தினர்களாகக்கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவுமாவட்டத்தில்2018ஆம்ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் 195 புள்ளிகள் பெற்று முதன்நிலை வகித்த பழம்பாசி அரசினர் தமிழ்கலைவன் பாடசாலைமாணவிஆர். துர்சாதனாவுக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை ஒன்றும், பாடசாலை உபகரணங்களும் நிகழ்வில் வழங்கப்பட்டன. (எ-ரி3)

## கொள்ளையிடவந்தவர்மீது "அசிட்" விசிறித்தாக்குதல்

சாவகச்சேரி, ஜன.16
அச்சுறுத்திப் பணத்தைக் கொள்ளையிட முயன்றவர்மீதுஎரிதிராவகத்தை(அசிட்)விசிறித் தப்பியுள்ளார் வர்த்தகர் ஒருவர். இந்தச் சம்பவம்கைதடிச்சந்தியில்நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

எரி திராவகத்தால் காயமடைந்த நிலையில் கொள்ளையிட முயன்றவரும், வர்த்தரும் சாவகச்சேரிமருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொங்கல்வியாபாரத்தைமுடித்துக்கொண்டு வர்த்தகநிலையத்தைமூடுவதற்குவர்த்தகர் ஆயத்தமாகிக் கொண்டிருந்துள்ளார். அப்போது பொருள்கள் வாங்குவது போன்று அங்கு வந்த ஒருவர் வர்த்தகரைத் தாக்கிப் பணத்தைஅபகரிக்கமுயன்றுள்ளார். வர்த்தகர்பணத்தைக்கொடுக்கமறுத்துப்போராடிய போதுகொள்ளையிடவந்தவர்அச்சுறுத்தியுள்ளார். அப்போது அங்கிருந்தஎரிதிராவகத்தை விசிறினேன் என்று வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

கொள்ளையிட முயன்றவரின் கண்ணில் எரிதிராவகம் பட்டுள்ளதால் அவர் மேலதிக சிகிச்சைக்காகயாழ்ப்பாணம்போதனாமருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)


**நாஹா மருத்துவ நிலையம்**
தீர்க்க முடியாத கை, கால் செயலிழப்பு, பாரிசவாதம், முழங்கால் வாதம், ஆஸ்மா, உடல் பருமன், தீராத புண்கள் குணமாதல்.
**வங்கிமுன் லேன்**
**சாத்தாவத்தை வயிரவர் கோவிலடி**
**(ஜெகபதி வீடு) மானிப்பாய்.**
**தொ.பே: 077 321 2740**

கொழும்பு, ஜிந்துப்பிட்டி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு
• **பிராமணக் குருக்கள்**
• **பிராமண உதவிக் குருக்கள்**
தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தங்குவதற்கு வீடு வசதி செய்து கொடுக்கப்படும்.
விண்ணப்பிக்கவேண்டிய முகவரி
98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.
Phone: 011 2433881 / 011 2431406 / 0777 261 777 / 0722 447606
Email : muruganginthupitiya@gmail.com

**SpiritMAX Engineering (Pvt) Ltd**
Turning your vision into values
அனைத்து விதமான கட்டட நிர்மாண வேலைகள் மற்றும் கட்டட ஆலோசனைகள்
(All Kinds of Civil Engineering Consultancy and Construction Services)
Architectural Design
Geo Technical Investigations
Structural Design
MEP Design
Drafting
Interior Design
Cost Estimation
Supervision
Construction & Renovation
No. 03,2nd Lane,Palaly Road, Jaffna.
Tel : 021 221 4142, 077 3784474, 077 3989791
e.mail : info@spiritmax.lk


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.12.2018 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது
அன்புத் தெய்வம்
**திருமதி**
**பாக்கியம் இராசையா**
அவர்களின்
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (16.01.2019) புதன்கிழமை
மு.ப 11.00 மணியளவில் அன்னாரது
இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**இல.75/17, பிறவுண் வீதி,**
**லிங்கன் கிறீம் ஹவுஸ்,**
**யாழ்ப்பாணம்.**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### பொன்னையா நாகரத்தினம்

**(ஓய்வுபெற்ற அதிபர் - குளமங்கால் றோ. க. த. க. பாடசாலை)**

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா நாகரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர் - குளமங்கால் றோ.க.த.க பாடசாலை) கடந்த (14.01.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாசிலாமணி செல்லம்மா மற்றும் சந்திரம்லர் அவர்களின் அன்பு மருமகனும், சரஸ்வதி, காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் செல்வரத்தினம், குணரத்தினம், இராசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிறேமஜெயந்தியின் அன்புக் கணவரும், டிஷானா (ஆசிரியர், மாறை/ஹேறன்பர்ட் தமிழ் மகாவித்தியாலயம்), டினேஷ், டிலக்ஷன் (மட்டக்களப்பு பல்கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவசுதனின் (இலங்கை வடபிராந்திய போக்குவரத்து சபை, கோண்டாவில் சாலை) மாமனாரும், கோஷிகாவின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொ.பே: 077 584 8339**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சின்னப்பு சங்கரப்பிள்ளை**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18.04.1940 | 27.01.2018 |

ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா !
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்களின் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கற்குளி வடக்கு,**
**சாவகச்சேரி.**
(CS 22457)(14.17)
**குடும்பத்தினர்.**


**கேன் காப்பகம்**
**இல.05, சபாபதிப்பிள்ளை வீதி**
**/ உடுவில், சுன்னாகம்**

**வாகன வாடகை**

கேன் நிறுவனம் வீடுகளில் தங்கியிருக்கும் நோயாளர்களைப் பார்வையிடும் திட்டத்தின் கீழ் வாகனத்தை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு எண்ணியுள்ளது. எனவே வாகனத்தை வாடகைக்கு அமர்த்தும் சேவையில் ஈடுபடுவோர் அதற்கான கூறுவிலையை சமர்ப்பிக்க வேண்டும். கூறுவிலை பற்றிய முழுவிவரங்களையும் காரியாலயத்தில் ரூபா 100/- செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். கூறுவிலை படிவத்தை கீழே குறிப்பிடப்பட்ட விலாசத்தில் விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலை படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்,திகதி 25.01.2019

**தலைவர்,**
**கேன் புற்றுநோயாளர் காப்பகம்,**
**இல.05, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்,**
**சுன்னாகம்.**
(CS/22508)(11,17)


## 28ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27.04.1926 | 16.01.1991 |

**கோபிந்தன் செபரட்ணம்**

கண்ணிமைத்து விழிக்கவில்லை
இருபத்தெட்டு அண்டுகள்
சென்றுவிட்டதையா
ஒரு நொடிப்பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம்
எம்மைவிட்டு ...

**17/2, மத்தியூஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் காணிக்கைகள்



| மலர்வு | மறைவு |
|---|---|
| 13.04.1966 | 14.01.2019 |

**திருமதி சியாமளா முத்துக்கிட்ணர்**
**(முன்னாள் ஆசிரியை - யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)**

உம் பணிக்காலத்தில்
ஆற்றலுள்ள ஆசானாய்
அன்புமிக்க தோழியாய்
அனைவரையும் அரவணைத்தீர் - இன்று
மௌனமாய் விடைபெற்ற
காரணம் அறியாமல்
கனத்த இதயங்களுடன்
அஞ்சலிக்கின்றோம் ஆத்ம சாந்திக்காய்.

**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள்.**




jitf.lk
www.jitf.lk

JITF 2019

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

தவறாதீர்கள்

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

25TH, 26TH, 27TH JANUARY | 10.00AM - 8.00PM

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்

More information: RIZWAN +773 959 835 | rizwan@saexhibitions.com

PLATINUM SPONSOR INSEE CEMENT
GOLD SPONSOR Browns A Heritage of Trust
ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH CCIY

OFFICIAL PARTNERS
HEALTH CARE ASIRI HEALTH · FOOD · BANKING · TELECOMMUNICATION Telecom · FERTILITY CARE NINEWELLS
ROOFING iROOF · ONLINE MEDIA MC · PRINT MEDIA
SUPPORTED BY · SRI LANKA
ENDORSED BY



# MBA

Leeds Trinity University

PIBT




Admissions are open for February Intake

ENTRY REQUIREMENTS

Bachelor Bachelors Degree + 2 years of Work Experience
Relevant Professional Qualification +2 years of Work Experience
Experienced entrepreneurs or individuals
holding senior management positions (Conditions Applied)

For more details : 0777570038

Monthly payment plans available

Most affordable world class MBA programme offered in Jaffna

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
021 222 8060 | 071 777 4666
info@iis.edu.lk | www.iis.edu.lk




## மணிவிழா வாழ்த்துக்கள்

செல்வி **பொ.விக்கினேஸ்வரி**

ஆசிரியர் (SLTS - 1)

இன்று (16.01.2019) புதன்கிழமை

அகவை அறுபதில் அகமகிழ்ந்து ஓய்வுபெறும்
ஆனையம்பதி பொன்மகளாம்
விக்கினேஸ்வரியை நீடூழி காலம் வாழ்கவென்று
மூத்தநயினாரை வினயமாக வேண்டுகின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/ஆனைக்கோட்டை**
**பாலசுப்பிரமணிய வித்தியாலயம்**

## வீடு வாடகைக்கு

பலாலி றோட் புன்னாலைக்கட்டுவன் வீதி அருகில்மூன்று அறை, ஒருசமையலறை, இரண்டு குளியல் அறை ஒரு கோலுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
(IMO,VIBER) 077 683 4296, 0762957018

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் உள்ள Huawei Show Room இற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

1. **விற்பனையாளர்** 3. **கணினி அறிவுடையோர்**
2. **கணக்காளர்** 4. **சிட்டை எழுதுனர்.**

O/L,AL படித்த இருபாலாரும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

Huawei Show Room
No.09, New Market, Hospital Road, Jaffna.
Tel: 021 222 3817, 077 3611 282

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 14.03.1947 மறைவு: 19.12.2018

கடந்த 19.12.2018 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
**பொன்னன் பரராசசிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.01.2019 புதன்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையிலும், நாளை மறுதினம் (18.01.2019) வெள்ளிக்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வு மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**சாந்தை, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர்.**

**தொ.பே: 077 056 9909, 077 956 7851**

## மரண அறிவித்தல்

# நீக்கிலாப்பிள்ளை சறோஜா

*(சாந்தி - ஆசிரியை - யாழ். மத்திய கல்லூரி)*



பிறப்பு 26.11.1973 இறப்பு 14.01.2019

2ஆம் வட்டாரம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை சறோஜா (சாந்தி) கடந்த (14.01.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நீக்கிலாப்பிள்ளை - ஆனந்தம் தம்பதிகளின் செல்வப் புதல்வி ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (16.01.2019) புதன்கிழமை பி. ப. 2.00 மணியளவில் மண்டைதீவு, புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**2ஆம் வட்டாரம், மண்டைதீவு.**
**077 5616337** **தகவல்: குடும்பத்தினர்.**

## அம்மாவின் விண்ணக வாழ்வில் 15ஆம் ஆண்டு



திருமதி

**லில்லி தேவசகாயம்**

இறப்பு: 16.01.2004

தன்னலம் அற்ற அன்பிற்கு பொருள் சேர்த்து
அன்பே உலக சுழற்சியின் அச்சு என்பதற்கிணங்க
அன்பிலே எம்மை வாழ வைத்து
ஆன்மீக வாழ்வை நாம் வாழ
வழிகாட்டிய உங்களது ஆளுமை
ஆச்சரியப்படத்தக்கது அம்மா.
ஆண்டவரது அன்பில். அமைதியில்
இளைப்பாறுவீர்களாக. ஆமென்.

இல.28, றக்கா லேன்,
சுண்டுக்குளி.

அன்புப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 09 . 1920



மறைவு 14 . 01 . 2019

### திருமதி வல்லிபுரம் சின்னத்தங்கச்சி

வாய்க்கால் தரவை பிள்ளையார் கோவிலடி பருத்தித்துறை வீதி. நீர்வேலி வடக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் சின்னத் தங்கச்சி 14.01.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வல்லிபுரத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான அன்னப்பிள்ளை, பூரணம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ் சென்றவர்களான கனகேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி (கொக்குவில்), தில்லைநடராஜா (சுவிஸ்) உல்லாசதேவி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ் சென்றவர்களான சேனாதிராசா, கனகரத்தினம் மற்றும் தேவசுந்தரலிங்கம், இந்திரா சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீதரன் (அச்சுவேலி), ஸ்ரீபவன் (ஜேர்மனி), சுதர்சன் (மேர்க்கன்டைல் பாதுகாப்பு சேவை), சைலஜா (S.V.R அசோசியேட்-கொழும்பு), கதீஜா (லண்டன்), சர்மளா (ஜேர்மனி), சுகன்ஜா (பிரான்ஸ்), செந்தில் நாதன் (சுவிஸ்), சுபத்திரா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சித்திரா மற்றும் நிரஞ்சலா (கொக்குவில்), சிவநாதன் (கமநல அபிவிருத்தி திணைக்களம்-கிளிநொச்சி), ரகுநாதன் (RIDEP Project - வடமாகாணம்), காலஞ்சென்ற அனுஜன் மற்றும் குபேராம்பிகை, சர்மிளா, உமாநந்தினி, தங்கேஸ்வரன், ராகவன், ரவிரஞ்சன், சந்திரகுமார், சிவமேகலை, சுபாகரன், கோபிகிருஷ்ணன், அபிராமி, சிந்துஜா, சிவமாலினி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஸ்ருதி, ஸ்ருதன், சர்வேதா, சவேதா, நர்மிளா, பிரியங்கா, இந்துஜன், அபிலாஸ், ஹர்வின், கஷ்மிதா, டர்சிகா, அப்கிதா, அனுஷ்கா, சதுஷன், விதுஷன், யதுஷன், நிருஷன், மதுமிதா, நித்திலன், லதுக்சன், கிருசன், பவேதினி, வினுஷன், வேணுதர்சன், டினோஜன், பிரவீனா, பதுசன், யாதவன், தயானந்தன், உமாசங்கர், உதையவர்ணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், அபிநிதாவின் கொள்ளுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2019) புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்கா நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**தொ.பே.இல: 077 612 8424, 077 925 8011**

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 17 . 05 . 1950



கண் நெகிழ 03 . 02 . 2012

### அமரர் கந்தப்பு செல்வராசா

(முன்னாள் காசாளர் - கூட்டுறவுச்சங்கம், கொடிகாமம்)


திதி:- வளர்பிறை ஏகாதசி (17.01.2019)

அன்பின் இலக்கணமாய் பாசத்தின் பெட்டகமாய்
கண் இமைபோல் எம்மைக் காத்து நின்ற தெய்வமே!
விண்ணகம் நீர் சென்றதேனோ? கண்களில் நீர் சுமந்தோம்
எண்ணத்திலே உயர்ந்தவரே சிரித்த முகம் என்று காண்போம்?
தியாகத்திரியாகி எமை உயர்த்திய குலவிளக்கே!
பண்புநிறை அரவணைப்பை எப்படி மறந்திடுவோம்?
உங்களது பிரிவால் இன்றும் தத்தளிக்கின்றோமே
ஓராயிரம் ஆண்டானாலும் உம் நினைவே
இறைபதத்தில் இளைப்பாற எந்நாளும் வேண்டுகின்றோம்

**இடைக்குறிச்சி, வரணி.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 01 . 1941



இறப்பு 15 . 01 . 2019

### ஆறுமுகம் இராமச்சந்திரன்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் பலகாடு காரைநகரை வசிப்பிடமாகவும் வெள்ளுவடிலேன் சுதுமலை வடக்கு மானிப்பாயை தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராமச்சந்திரன் நேற்று (15.01.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், கனகநாயகியின் (பவளம்) அன்புக் கணவரும், கனகரூபி (மகள்-சுவிஸ்லாந்து), ரவிச்சந்திரன் (மகன்-பரிசாரகர் யா/தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை), கஜேந்திரன் (மகன்-பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் -சுதுமலை தெற்கு) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன் (சுவிஸ்லாந்து), சபாநந்தினி (ஆசிரியை யா/புதுமடம் றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கமலாதேவி, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மைத்துனரும், நிவேதா, வருஷன், கனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2019) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**வெள்ளுவடி லேன்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# சதாசிவம் சண்முகநாதன்

(ஓய்வு பெற்ற பிரதம எழுது வினைஞர்)



தோற்றம் 26.10.1935 மறைவு 13.01.2019

நீர்வேலி மத்தியை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சண்முகநாதன் (13.01.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான சதாசிவம் வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் காலம் சென்றவர்களான பொன்னம்பலம் ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகனும் தவமணியின் அன்பு கணவரும் சலசா, கிரிஜா (ஆசிரியர், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சிவகுருநாதன் மற்றும்காலஞ்சென்றசாவித்திரிதேவிஆகியோரின்அன்புசகோதரரும் இராமநாதன், சுதர்சினி ஆகியோரின் மாமனாரும் துஷாணி, ஹரிஷ், ஹர்ஷா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் சிவயோகநாதன், சுபத்திராதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், இராசமணி ஆகியோரின் மைத்துனரும், கலைச்செல்வி, தயாபரன், ஆகியோரின் மாமனாரும் பாமினியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2019) வியாழக்கிழமைமு.ப.10.00மணியளவில்அவரின்இல்லத்தில்நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு**
**நீர்வேலி**

தகவல்:
குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின்
ஆரம்பக்கல்வி ஆசிரியை

**செல்வி**

**சறோஜா நீக்கிலாப்பிள்ளை**

அவர்கள் 14.01.2019 அன்று காலமானார்.
இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, ஆசிரியர் வட்டம்**

உதயன் தொடர்புகளுக்கு 0214931111 advt@uthayan.com

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 . 10 . 1919



உதிர்வு 05 . 02 . 2017

### அமரர் சின்னத்தம்பி முருகேசு

திதி : பூர்வபக்கதசமி 16.01.2019

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் அகல் விளக்காய் ஒளி தந்த
அன்பான ஐயாவே! புன்னகை பூத்த முகம் என்றும்
எங்கள் நெஞ்சங்களில் குடியிருக்க
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே நீங்கள் எந்நாளும் உயிர் வாழ்கின்றீர்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**பிள்ளைகள்,மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**
**பூட்டப்பிள்ளைகள்**

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி

## மரண அறிவித்தல்

# திருமதி இராசமணி தம்பு

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி தம்பு நேற்று (15.01.2019) செவ்வாய்க்ழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றசின்னையாதம்புவின் (ஓய்வுபெற்றசித்திர ஆசிரியர் - டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி) அன்பு மனைவியும் இராமநாதன் (பயனியர் மில் கொடிகாமம்), மனோன்மணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீரஞ்சினிதேவி, கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர் - திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கொடிகாமம்) ஆகியோரின் அன்புமாமியாரும் சிவனேசன் - கல்யாணி (பிரான்ஸ்), சிவாஜினி - தயாகுலன் (இத்தாலி), கிருஷ்ணராகுலன் - மதுரிகா (பிரான்ஸ்), சயந்தன் - சிவதீபா (பிரான்ஸ்), வினோதினி - நிமலராஜ் (ஆசிரியை - பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), நிரஞ்சன் - மதுரா (லண்டன்), ஷாமிளா குகேந்திரன் (லண்டன்), செந்தூரன் - ஷர்மிளா (ஆஸ்திரேலியா), நிரூபா - சந்திரமோகன் (லண்டன்), சங்கீதா (ஆசிரியை - கிளி/ விவேகானந்தாவித்தியாலயம்)-மதுரன்(பயனியர்கவின்சுத்திகரிப்புநிலையம்), நிரூஷன் - விபித்தா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கீர்த்தன், கீரன், விபுசன், வினுசன், வினுசன், ஜனஸ்கன், ஜபெஸ்கா, தீனயா, டில்ஷான், மீரஜா, அபிஷா, ஹர்னித், அபிஷா, அஸ்மிகா, ராம், அனாமிகா, பிருந்தாபன், நவிகா, நவசாயி, திலக் ஷன், திலக் ஷனா, தேனிஷன், நிரோன், நிவானி, நிலானா, மிதிலன், கவின், மாதுகி, மதுனிசா, நிகிஷா, நிதில்லா, நிமிக்கா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக் காகவேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



பிறப்பு 28.09.1926 இறப்பு 15.01.2019

**மருதடி பிள்ளையார் கோவிலடி,**
**கச்சாய் வீதி, கொடிகாமம்.**
**0777 046 796 (இராமநாதன்),**
**0776 081026 (கந்தையா)**

தகவல்:
**த.இராமநாதன் (மகன்)**
**த. கந்தையா (மருமகன்).**

# மீனவரது உடலை ஒப்படைக்க நீதிமன்றில் மனுச் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜன.16

கடலில் உயிரிழந்த இந்திய மீனவரின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் நீதிமன்றில் மனுச் சமர்ப்பிக்கவுள்ளது.

கடற்படையினரின் டோறா விசைப்படகுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் கடந்த 13ஆம் திகதி அதிகாலையில் உயிரிழந்த இந்திய மீனவரான முன்னச்சாமி என்பவரது சடலமே இந்தியத் தூதரகத்தால் பொறுப்பேற்கப் படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை துணைத் தூதரகம் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த இந்திய மீனவரின் மகள் என அடையாளம் காணப்பட்டவர் தனது தந்தையின் உடலைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளதனால் இந்தியாவுக்கு உடலை அனுப்பி வைக்கும் நோக்கில் மல்லாகம் நீதிமன்றிடம் துணைத் தூதரகம் மனுச் சமர்ப்பிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-105)

# ஊர்காவற்றுறை இறங்குதுறையில் இருந்து அனலைதீவு படகுச் சேவை

ஊர்காவற்றுறை, ஜன.16

ஊர்காவற்றுறை இறங்குதுறையிலிருந்து அனலைதீவு, எழுவைதீவுக்கான படகுச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போர் நடைபெற்ற காலத்தில் காரைநகர் கடற்படை முகாமின் பாதுகாப்புக் கருதி ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகில் இறங்குதுறை அமைத்து கடந்த 15 வருடங்களாகப் படகுச் சேவைகள் இடம்பெற்றன. தற்போது கண்ணகை அம்மன் கோவிலடி இறங்குதுறையில் திருத்த வேலைகள் நடைபெறுவதால் மீண்டும் ஊர்காவற்றுறை இறங்குதுறைப் பாலம் படகுச் சேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஊர்காவற்றுறை நகருடன் இணைந்த நிலையில் இறங்குதுறை காணப்படுவதால் படகுக்குச் செல்லும் பயணிகள் தமது உணவுத் தேவை மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்கு இலகுவாகக் காணப்படுவதாலும், போர் முடிவடைந்து 9 ஆண்டுகள் கடந்துள்ளதாலும் மீண்டும் ஊர்காவற்றுறை இறங்குதுறையை படகுச் சேவைக்கு பயன்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனலைதீவு, எழுவைதீவுப் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்ணகை அம்மன் இறங்கு துறையில் உணவு பெற்றுக் கொள்ள வசதிகள் இல்லாததாலும் இப் பகுதிகளிலிருந்து பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு வாகனங்களில் பயணிப்பதால் அதிகளவு நிதிச் செலவு ஏற்படுகிறது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (எ-9)

## கைதடி நுணாவில் அ.த.க. மாணவருக்கு உபகரணம் வழங்கல்

சாவகச்சேரி, ஜன.16

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைக்கும் ஒற்றுமையான நண்பர்கள் நலன்புரி செயற்றிட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் கணிணி நூல்கள் ஆகியவை வழங்கப் படவுள்ளன.

இந்த நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணிக்கு அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

முல்லேரியா சிறிராகுல மகா வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் கொழும்பு மெனிக் வர்த்தகத் தொகுதி வர்த்தகர்கள் இணைந்து கற்றல் உபகரணங்களையும், பாடசாலைக்கு கணிணி உபகரணங்களும், நூலகத்துக்கு புத்தகங்களையும் வழங்கவுள்ளனர்.

இந்தப் பாடசாலை கடந்த வருடம் டெங்கு நுளம்பு அற்ற பாடசாலையாக தென்மராட்சி பிரதேசத்திலும், மையப் பொது நிர்வாக அமைச்சின் உற்பத்தித் திறன் செயலகத்தால் நடத்தப்பட்ட உற்பத்தித் திறன் போட்டியில் தேசிய நிலையில் விருதும் பெற்றிருந்தது. (எ-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பணிபுரியும் தயாபரன் அவர்களின் அனபுத் தநதையார்

அமரர்

### வேலாயுதம் திருநாவுக்கரசு

தோற்றம் 24.05.1942 | மறைவு 13.01.2019

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
தரன் றேடர்ஸ் -130,132 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
உரிமையாளரும் ஊழியர்களும்

## மரண அறிவித்தல்

### திருமதி சவுந்தரநாயகியம்மா (இராசாத்தி) யோகராஜா



ஈஞ்சடி சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவுந்தரநாயகியம்மா (இராசாத்தி) யோகராஜா நேற்று (15.01.2019) செவ்வாய்க்கிழமை காலமாகினார்.

அன்னார் காலஞ்சென்ற யோகராஜாவின் (ஓவசியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை (மீனாட்சி) தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பாக்கியம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் நவநாயகியம்மா (ராணி), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (துரை) ஆகியோரின் சகோதரியும் நந்தினி (கனடா), ரவீந்திரன், புகழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் நடேசானந்தன், பவானி, துஷ்யந்தன் (நூலக பணியாளர் - தேசிய கல்வியற் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் ஜனகன், ஜனனி, சரணிகா, சாத்வீகா, சதுர்ஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2019) பதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராஜகிரி,**
**இணுவில் மானிப்பாய் வீதி,**
**மானிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போதும் குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY: ROYAL Industries Columbo12, T.P.077 727 7670
அனைத்து பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 2567

செவ்வாய்க்கிழமை
நியத ஜய — நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம்: 737 | வர்ணம்: ஆரஞ்சு | திகதி: 2019.01.15
வெற்றி இலக்கங்கள்: 13 16 55 65 | ஆங்கில எழுத்து: F
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 20,729,344/-
தொலைபேசி: 0112 333 546 - 47 web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 15.01.2019 | வெற்றி வாரம் 2435 | வர்ணம் நீலம்
மேடம் — வெற்றி இலக்கங்கள்: 17 39 43 61
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 44, 12, 188 /=
2019.01.16 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 908 | சீட்டிழுப்பு திகதி 2019.01.14 திங்கட்கிழமை
R 16 45 61 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,604,728/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
பச்சை நிற டிக்கட்டுகள் 2019.01.17ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 394 | வர்ணம்: இளஞ்சிவப்பு | சீட்டிழுப்பு திகதி: 2019.01.15
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 109,815,923/-
M 60 65 70 80
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 496 | வர்ணம்: நீலம் | சீட்டிழுப்பு திகதி: 2019.01.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,528,100/-
வெற்றி இலக்கங்கள்: 18 38 43 49 | ஆங்கில எழுத்து: J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 . 08 . 1961



இறப்பு 26 . 01 . 2018

### அமரர் இராசையா செல்வராசா (செல்வம்)

ஓராண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகள்
கால நகர்வில் கரைந்தாலும்
என் மனதில் உம் நினைவுகள்
என்றும் அழியாது
ஆத்ம சாந்திக்காக பிராத்திக்கின்றோம்

மாரியம்புலம் தாவடி வடக்கு
கொக்குவில்

மனைவி
குடும்பத்தினர்.

## காயமடைந்தார் ஸ்ரீவ் சிமித்

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான சிமித் காயமடைந்தார். இதனால் அவர் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பாரா என்பது தொடர்பில் பெரும் சிக்கல் எழுந்துள்ளது.

ஆஸ்திரேலிய அணி இறுதியாகத் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட வேளையில் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கிக் கொண்டார் சிமித். இதனால் அவருக்கு ஓர் ஆண்டுக்குத் தடை விதிக்கப்பட்டது. தடைக்காலத்தில் அவர் பல்வேறு லீக்குகளின் ரி20 தொடரில் விளையாடி வருகிறார். அவருக்கு முழங்கையில் தற்போது காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். தொடரில் சிமித் விளையாடுவது சந்தேகம் என்று தெரியவருகிறது. (ம)



## ராஜஸ்தானின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் பேடி அப்டன்

எதிர்வரும் ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக பேடி அப்டன் நியமிக்கப்பட்டார். இந்த வருட ஐ.பி.எல். தொடருக்காக ஒவ்வொரு அணிகளும் முழு வீச்சில் தயாராகி வருகின்றன. ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தனது தலைமைப் பயிற்சியாளராக பேடி அப்டனை நியமித்தது.

பேடி அப்டன் 2012ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ராஜஸ்தான் அணியின் பயிற்சியாளராக செயற்பட்டவர். அதன் பின்னர் அவரை ராஜஸ்தான் அணி பொறுப்பில் இருந்து விடுவித்தது. தற்போது மீண்டும் ராஜஸ்தானின் பயிற்சியாளரானார் பேடி அப்டன். (ம)



# வடமாகாண துடுப்பாட்ட தொடரில் வவுனியாவை தோற்கடித்தது யாழ்.







யாழ்ப்பாணம், ஜன. 16

வடமாகாணத் துடுப்பாட்டத் தொடரில் வவுனியா மாவட்ட அணியை 7 இலக்குகளால் வீழ்த்தி கிண்ணம் வென்றது யாழ்ப்பாண மாவட்ட அணி.

வடமாகாண துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 23 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாண மாவட்ட அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 27.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. சாயுறன் 29 ஓட்டங்களையும், திவாகர் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாண மாவட்ட அணியின் சார்பில் விதுசன், மதுசன் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண மாவட்ட அணி 15 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. பானுசன் அதிகபட்சமாக 31 ஓட்டங்களையும், ஜெயதர்சன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.




யாழ்ப்பாண மாவட்ட அணியின் வீரர்களான பானுசன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், மிதுசன் சிறந்த பந்து வீச்சளராகவும், விதுசன் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்கள். (ம-23,110)

# ஊரெழு றோயல் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 16

வடமாகாண டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி கிண்ணம் வென்றது.

உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழுறோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் றோயலின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் கபில். ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் யங் ஹென்றிஸின் இரண்டாவது கோல் தனேஸால் பதிவானது. முதல் பாதியின் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன.

இரண்டாம் பாதியின் 5ஆவது நிமிடத்தில்





றோயல் அணியின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார் நிதர்சன். அடுத்த நிமிடத்திலேயே யங்ஹென்றிஸின் இரண்டாவது கோல் ஞான றூபனால் பதிவானது. எடிசன் றோயலின் மூன்றாவது கோலையும், ஞான றூபன் யங் ஹென்றிஸின் மூன்றாவது கோலையும் பதிவுசெய் தனர்.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பெற்றிருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றிபெற்றது.

சிறந்த கோல் காப்பாளராக ஊரெழு றோயல் அணியின் அருள்ஸ்ரீபன்தாஸ் தெரிவானார். தொடராட்ட நாயகனாக றோயல் அணியின் எடிசன் தெரிவானார். ஆட்ட நாயகனாக யங்ஹென்றிஸ் அணியின் தனேஸ் தெரிவானார். பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண உடற் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.இராஜசீலனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் இ.யுகராஜ். யாழ். கால்பந்தாட்ட லீக்கின் போட்டிக்குழுத் தலைவர் ஏ.சுரேந்திரன், வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் போட்டிக் குழுத் தலைவர் கே.சுரேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-23)

## கோக்லி சதம், டோனி அரைச் சதம்

# ஆஸிக்குப் பதிலடி


ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நேற்று அடிலெய்டில் இடம் பெற்றது. இந்திய அணி 6 இலக்குகளால் ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி வெற்றியைப் பதிவு செய்தது.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி அடிலெய்டில் நேற்று இடம்பெற்றது. முதலாவது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்று 1:0என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக க்றே, பின்ச் களமிறங்கினர். அணி 20 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பின்ச் 6 ஓட்டங்களுடன் புவனேஸ்குமாரின் பந்து வீச்சில் 'போல்ட்' ஆகி ஆட்டமிழந்தார். இணைந்தார் கவாயா. அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் க்றே 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து மார்ஷ் களமிங்கி சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். கவாயா 21 ஓட்டங்களுடன் 'ரன்அவுட்' முறையில் ஆட்டமிழந்தார். ஆஸ்திரேலியாவின் இலக்குகள் ஒரு சீரான இடைவெளியில் வீழ்ந்த வண்ணம் இருந்தன. ஒரு முனையில் மார்ஷ் அதிரடியாக துடுப்பெடுத்தாடி சதம் கடந்தார். ஹன்ட்ஸ்கொம் 20 ஓட்டங்களுடனும், ஸ்ரோனிஸ் 29 ஓட்டங்களுடனும், மக்ஸ்வெல் 48 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மார்ஷ் 3 ஆறு ஓட்டங்கள், 11 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 131 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட மிழந்தார். லயன் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருக்க அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது.


பந்து வீச்சில் புவனேஸ்குமார் சிறப்பாக பந்து வீசி 4 இலக்குகளையும், முகமட் சமி 3 இலக்குகளையும், ஜடேஜா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

299 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சர்மா, தவான் களமிங்கினர். அணி 47 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தவான் 32 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். இணைந்தார் அணித் தலைவர் கோக்லி. இருவரும் இணைந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். ரோகித் தனது அரைச் சதத்தை தவற விட்டு 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கோக்லி சதம் கடந்து 104 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். தொடர்ந்து ராயுடு 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். டோனியும், தினேஸ் கார்த்திக்கும் இணைந்து அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். டோனி ஆறு ஓட்டங்கள் அடித்து தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். தினேஸ் கார்த்திக் 25 ஓட்டங்களுடன், டோனி 55 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருக்க இந்திய அணி ஆறு இலக்குகளால் வெற்றி பெற்றது.

முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றதால் 1:1 என்ற கணக்கில் போட்டி சமநிலையானது. மூன்றாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மெல்போர்ணில் இடம்பெறவுள்ளது.

பந்துவீச்சில் றிச்ஹட்சன், பீகிறின்றோவ், ஸ்ரோன்ஸ், மக்ஸ்வெல் ஆகியோர் தலா ஓர் இலக்குகளைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக இந்திய அணியின் வீரர் விராட் கோக்லி தெரிவு செய்யப்பட்டார்.



## ரோகித் புதிய மைல்கல்

பன்னாட்டு ஒருநாள் போட்டிகளில் ஓர் அணிக்கு எதிராக அதிகமான ஆறு ஓட்டங்கள் அடித்த மேற்கிந்தியதீவுகளின் வீரர் கிறிஸ் கெய்லின் சாதனையை இந்திய வீரர் ரோகித் சர்மா முறியடித்தார்.

இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி அடிலெய்ட்டில் நேற்று இடம்பெற்றது. இதில் 2 நான்கு ஓட்டங்கள் 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக ரோகித் 52 பந்துகளில் 43 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

கிறிஸ் கெய்ல் இங்கிலாந்துக்கு எதிராக 88 ஆறு ஓட்டங்களை அடித்து முன்னிலையில் இருந்தார். அந்தச் சாதனையை நேற்று இடம்பெற்ற போட்டியில் ரோகித் சர்மா முறியடித்துள்ளார். அவர் நேற்றைய போட்டியில் 2 ஆறு ஓட்டங்கள் அடித்ததன் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 89 ஆறு ஓட்டங்களை அடித்து கிறிஸ் கெய்லின் சாதனை முறியடித்தார்.

### ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடர்

## ரபேல் நடால், செரபோவா முதல் சுற்றில் வெற்றி

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடர் நேற்றுமுன் தினம் மெல்போர்னில் ஆரம்பமாகியது. ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் முதல் சுற்றில் உலகின் இராண்டாம் நிலை வீரரும், 2009ஆம் ஆண்டு கிண்ணம் வென்றவருமான ரபேல் நடால் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டக்வொர்த்தை எதிர் கொண்டார். இதில் நடால் 6:4,6:3, 7:5 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் 2008ஆம் ஆண்டு கிண்ணம் வென்றவரும், தரவரிசையில் 30ஆவது இடத்தில் இருப்பவருமான செரபோவா முதல் சுற்றில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஹேரியட் டார்ட்டை எதிர்கொண்டு 6:0,6:0 என்ற நேர் செற் கணக்கில் இலகு வெற்றி பெற்று இரண்டாம் இடத்துக்கு முன்னேறினார்.




**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

ஒருநாள், 10 நாள் நாட்டுக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

C R.COUNTRY CHICK HATCHERY

நாத்தாண்டிய - 072 340 9941
KL Farm Jaffna - 075 729 2885
076 161 1212

(CS 22502)(4.17)



**பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்**

**சிங்களம், ஆங்கிலம்**
O/L, A/L எழுதியோர்
உத்தியோகத்தர்

சன்நிதி மனோ T.P:077 76 77 773


# மரண அறிவித்தல்



பிறப்பு 14.07.1977 இறப்பு 14.01.2019

## திருமதி கஜரூபினி (சுசீ) குலனேஸ்

வளலாய் கிழக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், கொண்ட திருமதி கஜரூபினி (சுசீ) குலனேஸ் 14.01.2019 காலமானார்.

அன்னார் தேவராசா குலனேஸ் இன் அன்பு மனைவியும், ரேணுஜன், கிருசனா, சஸ்வின், கஸ்மிதா ஆகியோரின் பாசமிகு தாயும், நல்லலிங்கம் (சின்னராசா) காலஞ்சென்ற கமலாதேவி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தேவராசா மற்றும் துரையம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கமலரூபினி (இந்தியா), கஜதர்சன், அரிகர்ஸன் (சோனா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2019) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வளலாய் கூனன் காடு இந்து மயானத்தில் முற்பகல் 11.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நல்லலிங்கம்
தந்தை-சி.(சின்னராசா)
கணவர்-தே.குலனேஸ்
குடும்பத்தினர்.

தொ.பே.இல: 077 6432 908




**விசேட இறுதி கருத்தரங்குகள்**

யாழ்பல்கலைக்கழக BA தெரிவுப்பரீட்சைக்கான பொது உளச்சார்வு
புதன் (இன்று), வெள்ளி பி.ப1.30மணி

வடமாகாண அலுவலக பணியாளர்
புதன் (இன்று), வியாழன், வெள்ளி பி.ப4.30மணி

அதியர் சேவை தரம் 3
புதன், வியாழன், வெள்ளி பி.ப5.00 → 7.30மணி

0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)


ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் பிரான்ஸ் நாட்டு வீராங்கனை கரோலின் தீவிரமான பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

## கந்தையா தர்மகுலசிங்கம் (ரவி)

***(K.T.M. Oil மில் உரிமையாளர்)***



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மகுலசிங்கம் 14.01.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் லீலாவதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை வல்லவாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் மங்கையற் கரசி (மாலினி) யின் பாசமிகு கணவரும் கௌசிகன், விபுலன், பவுஜன், கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் வாசுகி, கேசிகா, தீபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரகுநாதன், ரூபராணி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரிமளாதேவி, சத்தியமூர்த்தி, ரவீந்திரநாதன், வள்ளியம்மை, சிவகுருநாதன், கந்தசாமி, தெய்வானை, ஞானேஸ்வரி, பொன்னையா, தில்லைநாதன், இந்திராதேவி, லிங்கநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2019) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**K.T.M. Oil Mill,**
**பருத்தித்துறை வீதி,**
**கல்வியங்காடு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.